Guaranteed Circulation 1000 Copies.

Registered No. M. 1124.

Vol. I] [No 6

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 4-NOV 1914 MADRAS.

இந்தியன் லா ஜர்னல்

(மாதம் நான்குமுறையாக பிரதி சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.)

1914ஹு செப்டம்பர்மீ 19உ சனிக்கிழமை.

சென்னை ஹைகோர்ட் தீர்ப்புகள்.

PRINTED AND PUBLISHED BY S. SUBRAMANYA AIYAR,
AT THE INDIA PRINTING WORKS, 117, ARMENIAN STREET, MADRAS.—31—10—1914.

THE INDIAN LAW JOURNAL.

(TAMIL EDITION.)

இந்தியன் லா ஜர்னல்.

(தமிழ் பிரசுரம்.)

(மாதம் நான்குமுறை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.)

வருஷசந்தா.

	ரூ.அ.பை.
இந்தியா, பர்மா, ரெங்கூனுக்கு தபால் சார்ஜ் உள்பட	6—0—0
சிங்கப்பூர் பினங்கு	8—0—0
ஒரு வார சஞ்சிகை	0—4—0

பத்திரிகை வேண்டியவர்கள் சந்தாத் தொகையை அனுப்பி கடிதம் எழுதவேண்டும். இல்லாவிடில் வி. பி. தபாலில் அனுப்பும்படி உத்திரவு செய்யவேண்டும்.

மாதிரி சஞ்சிகை வேண்டியவர்கள் ½ அணா தபால் ஸ்டாம்பு அடக்கம் செய்து அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

	ரூ. அ. பை.
48 சஞ்சிகைகளிலும் ஒரு வருடத்திற்கு ஒரு பக்கத்திற்கு	60—0—0
6 மாதங்களுக்கு ...	30—0—0
3 ,, ...	15—0—0

இந்த பிரகாரம் பாதி பக்கத்திற்கும், கால் பக்கத்திற்கும் கணக்கு செய்துகொள்ளவேண்டும். சாஸ்வத ஒப்பந்தம் செய்கிறவர்கள் மானேஜருடன் பிரத்யேக ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

விளம்பரம்.

இந்தியன் லா ஜர்னலுக்கு சந்தாதார்கள் சேர்க்க கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

மானேஜர்,

இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

"Chandra Raka"

A very interesting Tamil Novel

BY

Mr. S. M. Appasawmi Naidu

சந்திர ரேகா

(அற்புதமான தமிழ் நாவல்.)

நீதிநூலுக்கு நூலாகவும் இன்பமான கதைக்குக்

கதையாகவுமிருக்கும்படியாக

ம-ா-ா-ஸ்ரீ எஸ். எம். அப்பாசாமி நாயுடு

அவர்களால் இயற்றப்பட்டது.

வாசிக்க வாசிக்க இன்பமாயிருக்கும்.

கம்பராமாயணம், கைவல்லியம், திருக்குறள், பாரதம், பாகவதம், பகவத்கீதை முதலியவைகளிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

தும்ப மலர்போல வெளுப்பான கடுதாசியில் முத்துப்போன்ற எழுத்துகளால் அச்சிடப்பட்டு நேர்த்தியாகப் பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை—தபால் சார்ஜ் உள்பட ரூ. 1

மானேஜர்,

இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

ஸ்ரீ

பெரியாழ்வார் அருளிச்செய்த

திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும்

இவை வைத்த மாநிதி—முடும்பை

கோபாலகிருஷ்ணமாச்சாரியார் அவர்களால்

உரையுடன் இயற்றப்பட்டது.

இதனுள் அடங்கியவை.

1. பெரியாழ்வார் சரித்திரம்
2. திருப்பல்லாண்டு (உரையுடன்)
3. பெரியாழ்வார் திருமொழி (உரையுடன்)
4. செய்யுள் முதற்குறிப்பு அகராதி

குறிப்பு:—இதில் அவசியமான பதப்பிரயோஜனங்களையும் இன்றியமையாத இலக்கணக் குறிப்புகளையும், புராணக்கதைகளையும் எடுத்துக்காட்டி, பதப்பொருள், கருத்து, விசேஷார்த்தம், சொற்சுவை, பொருட்சுவை, யாப்பிலக்கணம், அணியிலக்கணம், ஐதிஹ்யம் அங்கங்கே விளக்கியிருத்தலோடு ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயங்களையும் விவரிக்கப்பட்டிருக்கிறது. பூர்வாசார்யர்களின் வியாக்கியான வாக்கியங்களும் உரிய இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. அத்தியாபகர்க்கு மிகவும் அனுகூலமாகயிருக்கும். இதன் விலை ரூ. 1 4 0.

தபால் கூலி பிரத்தியேகம்.

மானேஜர், "இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,"

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
4-NOV 1914

இந்தியன் லா ஜர்னல்

மாதம் நான்குமுறை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.

Vol. I. தொ. 1. | 19TH SEPTEMBER 1914. | No. 6. நெ. 6.

இந்தியன் லா ஜர்னல்.

1914௵ செப்டம்பர்௴ 19௳ சனிக்கிழமை.

RIGHTS OF BELLIGERENT SUBJECTS.

யுத்தம் செய்யும் தேசத்தவர்களின் ஸ்வதந்தரங்கள்.

இப்போது ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்தில் இன்னின்ன தேசத்தார்கள் ஸம்பந்தப்பட்டிருக்கிறார்களென்பது நமது நண்பர்களுக்குத்தெரியும். இந்த யுத்தத்தில் இங்கிலாந்து, ப்ரான்ஸ், பெல்ஜியம், ருஷ்யா, ஸெர்வியா ஆகிய தேசத்தார்கள் ஒரு கக்ஷி. ஜெர்மனியும், ஆஸ்டிரியாவும் ஒரு கக்ஷி. ஸாதாரண காலத்தில் ஸமாதானத்தை நிலை நிறுத்தி வாழ்ந்துவருங்காலையில் ஒரு தேசத்து ப்ரஜைகள் மற்றொரு தேசத்தில் ஜீவனார்த்தமாகப் பல துறைகளில் உத்தியோகம் வகித்தோ வியாபாரம் செய்தோவசித்துவருவார்கள். ஒரு தேசம் மற்றொரு தேசத்தோடு யுத்தம் செய்யத்தீர்மானித்துவிட்டால் தங்கள் தேசத்திலிருக்கிற சத்ருவின் ப்ரஜைகளிடம் தாங்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைப்பற்றியும் சத்ருவின் ப்ரஜைகள் தாங்கள் வசித்துவருகிற தேசத்து ராஜனிடம் நடந்து கொள்ளவேண்டியவைகளைப்பற்றியும், யுத்தம் நடக்கும்போது ப்ரதிதேசத்தார் அனுஷ்டிக்கவேண்டிய நீதிகளைப்பற்றியும் இண்டர்நேஷனல் லா என்னும் பரஸ்பர தேச சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒருவன் ஒரு குற்றம் செய்தான் என்று வைத்துக்கொள்வோம். அதனைப் போலிஸார் பிடித்து ஜட்ஜி முன் வைக்க; குற்றத்துக்குத்தக்கபடி தண்டனைவிதிக்கிறார். ஒரு தேசம் குற்றம் செய்தால் அதை எப்படி தண்டிக்க முடியும்? முடியாதல்லவா அதற்காக சில தேசங்கள் ஒன்று சேர்ந்து ஸமாதான காலத்திலேயும் யுத்த காலத்திலேயும் ப்ரதி தேசம் நடந்து கொள்ளவேண்டிய நீதிகளை தெரிவிக்கும் சட்டம் தான் இண்டர்நேஷனல் லா. சுருக்கிச்சொல்லின் அது ஒரு ஒழுக்கச்சட்டமாகும். இச்சட்டத்தை மீறி நடந்த தேசம் உலக நிந்தைக்குப் பாத்திரமாகிறது. இதுவே பெரிய தண்டனை. சுமார் இருநூறு வருஷத்துக்கு முன் இந்தச்சட்டம் அமெரிக்கா தேசத்து நீதிபதியாகிய ஜஸ்டிஸ் கென்ட் என்பவராலும் இங்கிலாந்து தேசத்து நீதிமானாகிய லார்ட் ஸ்டோவல் என்பவராலும் முதன் முதல் ஏற்படுத்தப்பட்டது. ஐரோப்பாவிலிருக்கும் ப்ரதி இராஜாங்கமும் அமெரிக்கா தேசமும் இவ்விஷயத்தில் வெகு ஊக்கம் காட்டி ஹாலண்டு ராஜதானியாகிய ஹேக் என்றப் பட்டணத்தில் இண்டர் நேஷனல் கோர்ட் ஒன்று ஸ்தாபித்தார்கள். என்

அங்கு ஸ்தாபிக்கப்பட்ட தென்றால் அது ஒரு சிறிய தேசம். ஒரு வல்லரசின் பொல்லாப்பையும் மனத்தாங்கல்களையும் அடையாதது. ஒரு தேசம் மற்றொரு தேசத்தோடு யுத்தம் செய்ய தீர்மானிக்கு முன்னதாக அத்தேசத்திலிருக்கிற சத்ரு ப்ரஜைகளுக்கு 24 மணியோ அல்லது 48-மணியோ தேசத்தை விட்டு புறப்படும்படி நோட்டீஸ் கொடுப்பார்கள். சண்டை ஆரம்பம் செய்யப்பட்டவுடன் தேசத்திலிருக்கிற ப்ரஜைகளை சண்டை முடிகிற வரையில் ஒரு கோட்டையில் வைத்திருப்பார்கள். சத்ரு ப்ரஜைகள் தங்கள் தேசத்தோடு கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளக்கூடாது. இப்போது இங்கிலீஷ் ப்ரஜை ஒருவன் ஜெர்மன் ப்ரஜையோடு ஒரு வித ஸம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாது. இங்கிலீஷ்க்காரர் ஒவ்வொருவரும் ஜெர்மன் தேசத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் விரோதி. சண்டைக்கு முன் ஏதாவது ஜெர்மன் தேசத்து ப்ரஜையோடு கொடுக்கல் வாங்கல் ஏதாவது ஸம்பந்தம் இருந்தாலும் சண்டை ஆரம்பித்தவுடன் நின்று விடுகிறது. ஆனல் இங்கிலீஷ்காரருக்கு ஜெர்மனியிலோ அல்லது ஜெர்மனிதேசத்தாருக்கு இங்கிலாந்திலோ ஏற்பட்டிருக்கக்கூடிய பாங்கிலுள்ள ஸொத்துக்களாவது பங்குகளாவது பராதீனப்படுத்தப்பட மாட்டா.

யுத்தம் நடக்கிறவரையில் முதலுக்கு வட்டிகொடுக்கப்படமாட்டா. யுத்தம் முடிந்த பிறகு பூராவாக வட்டி கட்டி கொடுக்கப்படும். ஜெர்மனிதேசத்து ப்ரஜையின் ஸொத்து இங்கிலாந்து தேசத்திலிருந்தால் அந்த ஸொத்துக்கும் இங்கிலாந்து கவர்ன்மெண்டுக்கும் பாத்யதை ஒன்றும் கிடையாது. யுத்தம் ஆரம்பிக்கு முன் இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த ராஜ்யங்களின் துறைமுகத்தில் ஜெர்மன் வியாபாரக் கப்பல்கள் இருந்தால் அவைகளை ஜாக்ரதையாகக் காப்பாற்றி சண்டை முடிந்தவுடன் ஜெர்மனியிடம் ஒப்புவிக்க வேண்டியது.

MADRAS HIGH COURT.

மதருஸ் ஹைகோர்ட்.

ஜட்ஜிகள்:—ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.
ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் அய்லிங்க்.

C. M. S. A. 1913-ம் வருஷத்திய 31-நெ.

1914-ம் வருஷம் மார்ச்சு மாதம் 4-தேதி.

அப்துல் லதிப் சாஹேப் வகையரு உபேர் } அப்பீல் வாதிகள்.

ப.

பாதுலா பிபி அம்மாள்—அப்பீல் பிரதிவாதி.

ஸீ-பு-கோட் (1908-ம் வருஷத்திய 5) ஆ. நெ. XXI, R 2 (3). வெளியில் பர்த்தி செய்துக்கொள்ளுதல்—அசையாப் பொருளை ஒப்புவிக்கும்படிக்கும் பணம் செலுத்தும்படிக்கும் டிக்ரீ.

C. P. C. ஆ. 21, R. 2–சுத்தரொக்க டிக்ரிகள் விஷயத்தில் செய்யப்படும் பர்த்தி ஏற்பாடுகளுக்கே வற்புறுத்தப்பட்டதல்ல பணம் கொடுக்க வேண்டியிருக்கிற எவ்விதமான டிக்ரிகளுக்கும் அது அன்வயப்படுகிறது.

1909-ம் வருஷத்திய 662-நெ. அசல் வியாஜ்ஜியத்தில் இராணிப்பேட்டை டி. மு. கோர்டில் 1912-ம் வருஷத்திய எக்ஸிக்யூஷன் பிடிஷன் நெ. 322-இல் பிறந்த உத்திரவின் பேரில் வட ஆற்காடு டிஸ்ட்ரிக்ட் கோர்டார் 1912-ம் வருஷத்திய 498-நெ. அப்பீல் உத்திரவின் பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டது.

தீர்ப்பு:—இந்த வியாஜ்ஜியத்தில் சில அசையாப்பொருளை ஒப்புவிக்கவும் பணம் கொடுக்கவும் டிக்ரி பிறந்தது. இந்த டிக்ரியை நிறைவேற்றுவதற்கான விண்ணப்பத்தின் பேரில் பிரதிவாதிகள் பர்த்திசெய்வதற்காக 500-ரூ. செலு

த்தியிருப்பதாக ஆக்ஷேபித்தார்கள். இந்த பார்த்தி ஏற்பாடு உறுதிப்படுத்தப்படவில்லை யென்று இரண்டு கீழ்கோர்ட்டாரும் சி. பு. கோட், ஆர்டர் 21, ரூல் 2, வாக்கியம் 3 இன்கீழ் இந்த ஆக்ஷேபணையை நிராகரித்து விட்டார்கள். அவர்கள் செய்தது சரியென்று நாங்கள் நினைக்கிறோம். ஆர்டர் 21, ரூல் 2, வாக்கியம் 1-இன்படி அந்த வாக்கியத்தை அதற்கு முந்திய பாகத்துடன் சேர்த்துப் படித்துப் பார்த்தால் அது பணம் செலுத்த வேண்டியதென்கிற எவ்விதமான டிக்ரிக்கும் அர்த்தமாகிறது. அம்மாதிரியான டிக்ரிக்காக முழுமைக்குமாவது அல்லது அதன் ஒரு பாகத்திற்காகவாவது பார்த்தி ஏற்பாடுசெய்து அந்த டிக்ரி பெற்றவருக்குத் திருப்தியுண்டானால் அந்த டிக்ரி பெற்றவர் அது விஷயத்தைப்பற்றி கோர்ட்டாருக்கு உறுதி மொழி கொடுத்திருக்க வேண்டியது. இந்த வியாஜ்ஜியத்தில் பிறந்த டிக்கிரியானது மேற்கண்ட பிரிவில் சொல்லியிருக்கப்பட்ட மாதிரியாகத்தான் இருக்கிறது. ஆகையால் மேல்படி பிரிவானது இவ்வியாஜ்ஜியத்திற்கு செல்லத்தக்கதாயிருக்கிறது. அப்பீல் வாதியானவன் அசையாப் பொருளை ஒப்புவிக்கிறதற்காக ஏற்படும் டிக்ரிகளுக்கு ஷை ரூல் செல்லாதென்பதற்கு சங்கரன் நம்பியாருக்கும் கனரா குருபுக்கும் உண்டான வியாஜியத்தின் தீர்ப்பை ஆதாரமாகக் கொண்டிருக்கிறான்.

ஆனால் அந்த பிரிவை இப்பால் திருத்துப்பாடுசெய்துவிட்டபடியால் பணம் செலுத்துவதற்கான எவ்விதமான டிக்ரிகளுக்கும் அதுபொருந்துகிறது ஆகையால் அந்த பிரிவின் நிபந்தனைகளைப் பூரா நிறைவேற்றாமல் இருப்பதற்கு எங்களுக்குக் காரணம் தோன்றவில்லை. மேலும் 1859-வருஷத்திய கோட்டின் படிக்கி பாபா மஹமத்துக்கும் வெப்புக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் பார்த்தி ஏற்பாடுகளைப் பற்றியே தத்கால சட்டத்திற்கு அனுசரணையான ஏற்படுகள் பணம் செலுத்துகிற டிக்ரிகளுக்குச் சம்பந்தமான பார்த்தி ஏற்பாடுகளுக்கே உரித்தானவை அல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. 22 சென். 182-இல் கற்றறிந்த ஜட்ஜிகள் கோட்டில் பின்னிட்டான மாறுதல்களை ஆதாரமாகக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது அந்தப் பிரிவில் இக்கேஸுக்கு பொருந்தியிருக்கும் வார்த்தைகளை சேர்த்திருப்பதினால் மேற்கண்ட மாறுதல்கள் பயன்படாமற் போயின.

இந்த அப்பீலை செலவு உள்பட தள்ளுபடி செய்யப்பட்டது.

MADRAS HIGH COURT.

மதருஸ் ஹைகோர்ட்.

ஆனரபில் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

1912ளு த்திய 920 நெ. C. R. P.

1914ளு த்திய பிப்ரவரிமீ 13வ

மதுரத்தாச்சிக்காக அதிகாரம் பெற்ற ஏஜெண்டு வைத்தியலிங்கப் பிள்ளை.	மனுவுதார் (மனுவுதார் 3 வது பிரதிவாதிகள்.)

v.

சொக்கலிங்கப் பிள்ளை—பிரதிவாதி (வாதி).

லா பாய்ண்டு:—சிவில் புரோசீடர் கோடு V வது ஆர்டர் 12-வது ரூலில் பிரதிவாதிக்கு அவன் வசிப்பதாகத் தெரிந்திருக்கிற எல்லா இடங்களுக்கும் சம்மன் வாங்கிப்போகவேணுமென்பதும், ஆனால் அந்தப்பிரதிவாதிபோகிற எல்லா இடங்களுக்கும் கோர்ட்டு அமீனாவுடன்கூட வாதி போகவேணுமென்று கட்டாயமில்லை என்பதும்.

1912ளு த்திய ஸ்மால்காஸ் வியாஜ்ஜியத்தில் 1912ளு த்திய 408 நெ. மிஸ்ஸலேனியஸ் அப்பீலில் மாயவரம் சபார்டினேட்டு ஜட்ஜ் செய்த உத்திரவை மாற்றும்படி கோரி 1887ளு த்திய IX வது ஆக்ட்டு 25-வது பிரிவின்படி கொடுத்துக்கொண்ட மனுவு.

தீர்ப்பு:—இந்த கேஸில் பிரதிவாதி சாதாரணமாய் வசிக்கு மிடமாகிய மேலயூருக்கு இரண்டுதபா சம்மன் பெற்றுக்கொண்டார்கள். முதல் தடவை புரோசெஸ் சேர்வர் அவடம் போனபோது 2-வது பிரதிவாதியின் காரியஸ்தனுக சொல்லப்பட்ட பசுபதி என்பவனையும், அந்த வூர் கிருமம் முன்சீபையும் அக்கம் பக்கம் அயலாரையும் விசாரித்ததுடன் அந்த கேசில் சம்மந்தமான 3 பிரதிவாதிகளும் 3 பிரத்தியோக பிரத்தியோகமான இடங்களுக்குப்போயிருப்பதாகவும் அவாள் எப்போ திரும்பிவருவதும் அவர்களுக்குத் தெரியாதென்றும் புரோசெஸ்சேர்வருக்கு சொல்லிவிட்டார்கள். 4 மாசம் பொறுத்து வாதி மறுபடி 2-வது சம்மன் பெற்ருன். மறுபடி அந்த சேர்வர் ஷை- பிரதிவாதி வாலாயமாய் வசிக்கும் இடத்திற்குப்போய் விசாரித்ததில் முன் மாதிரியே சொல்லக் கேட்டான். இரண்டு முறையும் பூர்ணமாகவிசாரிக்கப்பட்டது. அந்த சேர்வரிட இண்டார்சுமெண்டில் பிரதிவாதிகளுக்கு நேரில் சம்மன்களை சர்வ் செய்ய முடியவில்லை என்று கண்டெழுதப்பட்டது. C. P. C. V. உத்தரவின் 12-வது ரூலின்படி கூடுமானல் சம்மன்கள் நேரில் கொடுபடவேண்டியதென்று சொல்லப்பட்டிருக்கிறது. சேர்வு செய்கிற உத்தியோகஸ்தன் அவன் விசாரித்ததில் பிரதிவாதி ஒரு குறித்த இடத்திற்குப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டால் அப்படி விசாரணையின் பேரில் தெரிவிக்கப்பட்ட இடத்திற்கு வாதியானவன் சம்மன் பெறவேண்டியதென்றும் பின்னிட்டு அந்த இடத்தையும் விட்டு அவன் வேறே இடம் போய்விட்டதாக தெரிந்தால் அவன் போயிருக்கிறதாக சொல்லப்பட்ட இடங்களுக்கெல்லாம் அவனை தேடிக் கொண்டு போக முயற்சி செய்யவேண்டுமென்றும் தீர்ப்பு சொல்லும்படி கோறப்படுகிறது.

இந்த வாதத்தை என்னல் ஒப்புக்கொள்ள முடியாது. பிரதிவாதி வேறே கிருமத்திற்கு போய் விட்டானென்று சொன்னவுடனே, அப்படி குறிப்பிடப்பட்ட கிருமத்திற்கு வாதி சம்மன் பெறவேணுமென்கிற நிபந்தனையை ஏற்படுத்தினல் பிரதிவாதிக்கு சம்மன் சர்வ் செய்விக்க முடியவே முடியாது; ஏனென்ருல் அந்த கிருமத்தில்போய் விசாரித்தால் அவன் வேறே ஒரு கிருமத்திற்கு போய்விட்டதாக மறுபடி சொல்லுவார்கள். பிரதிவாதிக்கு வேறே வாசஸ்தானமாவது அவன் தொழில் செய்யும் இடம் ஏதாவது வேறே யிருந்தாலும் அப்படி இருப்பதாக சொல்லப்பட்ட இதர இடத்திற்கு மட்டில் சம்மன் வாங்கவேண்டியதற்கு வாதி கட்டுப்பட்டவனு யிருக்கிறுன். ஆனல் பிரதிவாதி ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் போய்க்கொண்டேயிருப்பானுகில் அவன் பிரயாணம் செய்துக்கொண்டு போகிற இடங்களிளெல்லாம் அவனை தேடிக் கொண்டு போவதும் வாதியின் கடமை அல்ல.

இது சம்மந்தமாய் ஏப்பிரஹாம் பிள்ளைக்கும் டோனல் டுஸ்மிதுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் ஜட்ஜ் சங்கரநாயர் செய்த தீர்ப்பை எனக்கு எடுத்துரைக்கப்பட்டது. அந்த கற்றறிந்த ஜட்ஜியானவர் 325-ம் பக்கத்தில் சொல்லுகிறதாவது சம்மன் பெற்றுக்கொள்ளக்கூடாதென்று பிரதிவாதி கைக்கு அகப்படாமலிருப்பதாகவாவது வேறே காரணங்களினுல் சாதாரணமாய் சர்வ் செய்ய முடியாதென்ருவது நம்புவதற்கு நியாயமான காரணங்கள் தென்பட்டால் மட்டும் சப்ஸ்டிடூடெட் சர்விஸுக்கு உத்திரவு செய்யலாமென்று கண்டிருக்கிறது. இந்த கேசில் இரண்டு முறையும் சாதாரணமாய்சம்மன் சர்வ் செய்யமுடியவில்லை. ஏனென்ருல் அந்த இரண்டு முறையும் பிரதிவாதிகள் வாலாயமாய் வசிக்குமிடத்திற்கே சம்மன் கொண்டுபோய் இரண்டு முறையும் அவர்கள் இதரமான இடங்களில் இருப்பதாகவும் அவர்கள் திரும்பிவரும் காலம் தெரியாதென்றும் ஏற்பட்டது. வெள்ளப்ப செட்டிக்கும் வீரப்ப

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - NOV 1914
MADRAS

செட்டி வகைரூவுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தின் ஆதாரத்தின்படி முதல் தடவை சம்மனுக்கு பிரதிவாதியின் இருப்பிடம் வாதிக்குத் தெரியாவிட்டால், அதனுலேயே சப்ஸ்டிடேெட் சேர்விஸ்க்காக சம்மன் கொடுக்கும்படி கேட்க வாதிக்கு பாத்தியமில்லை. இந்த கேசு அந்த மாதிரியானதல்ல. பிரதிவாதிகள் அவர்களுடைய வாலாயமான இருப்பிடத்திற்கு சில மாசங்கள் கழித்து வருவார்களென்று வாதி தெரிந்துகொண்டு 2-வது முறை சம்மன் பெற்ருன். ஆகையால் பிரதிவாதிகளை கண்டு பிடித்து அவாளுக்கு சம்மன் சர்வ் செய்விக்கக்கூடிய பிரயத்தின மெல்லாம் செய்யப்பட்ட தென்றே நான் அபிப்பிருயப் படுகிறேன். C. P. C. 12-வது ரூல் V-வது ஆர்டரின் வியாக்கியானத்தின்படி பிரதிவாதிகளின் இருப்பிடத்தில் சம்மன் சர்வ் செய்ய முடியவில்லை என்று ஏற்படுகிறது. சபார்டினேட்டு ஜட்ஜி அபிப்பிராயம் கொண்டபடி முதல் தடவை சம்மன் சர்வ் செய்தது சரியான தென்றே நானும் தீர்மானிக்கிறேன்.

இன்னெரு சங்கதி அதாவது முதல் தரம் விசாரிக்கும் காலத்தில் 2-வது பிரதிவாதியின் காரியஸ்தன் ஆஜரிலிருந்தான். அன்றியும் இந்த பிரஸ்தாப வியாஜ்ஜியம் விசாரணைகாலத்தில் ஷை காரியஸ்தன் இந்த கேசுக்காக அல்லாவிட்டாலும் வேறே கேசுக்காக இந்த கோர்ட்டில் வந்து ஹாஜராயிருந்ததாயும் இந்தபிரதிவாதிகளின் பெயர் கூப்பிடப்பட்டு ஷை பிரதிவாதிகள் ஹாஜரில்லை யென்று ஒரு தலையாக தீர்ப்பு செய்யப்பட்ட சங்கதியும் அவனுக்குத்தெரிந்திருந்தது. இதுவுமன்றி ஷை ஒரு தலை தீர்ப்பை நிவர்த்திக்கும் படியான மனுவுக்கனு சறணையாக தாக்கல்செய்த பிரமாண பத்திரத்தில் ஷை தவணை தவிர்க்கக்கூடாமையாயிருந்ததென்றும் பிரதிவாதிகள் ஷை தாவாவைக்குறித்து யதார்த்மான ஆன்சர் கொடுக்கக்கூடியவர்களென்றும் ருசுப்படுத்தும்படியான சங்கதிகள் கண்டிருக்கவில்லை. பிரதிவாதிகளுக்கு எதிரிடையாக நியாயமாய் செய்த தீர்ப்பை நிறைவேற்ற வொட்டாமல்தடுப்பதற்காக இந்த வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டதாகவும் பிரதிவாதிகளுக்கு யாதொருசரியான டிபென்சில்லாததால் வியாஜ்ஜியத்தை நடத்தாமல் விட்டு விட்டதாகவும் எனக்குத்தோன்றுகிறது.

இந்த மனுவை செலவுள்பட தள்ளுகடை செய்திருக்கிறேன்.

MADRAS HIGH COURT.

மதருஸ் ஹைகோர்ட்.

ஆனரபில் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

1912ஷு த்திய C. R. P. No. 573,

1914ஷு பிப்ரவரிமீ 18௳

கங்குலருமகோடய்யா வகைரு 2-பேர் } மனுவுதார்கள்.

ப.

பீமவரபா கண்வா ரெட்டி வகைரு 2 பேர் } ப்ரதிவாதிகள்.

லா பாயிண்டு:—இன்ஸால்வன்ஸி நடவடிக்கையில் கொடுத்த சாக்ஷியம் போதுமானது. புரோவின்ஷல்இன்ஸால்வன்ஸி ஆக்டின்37-வது பிரிவின் கீழ் ஒரு கோர்ட்டார் உத்திரவு செய்ய இன்சால்வன்சி நடவடிக்கையில் கொடுத்த சாக்ஷியத்தையே உபயோகிக்க ஷை கோர்ட்டுக்கு அதிகார முண்டென்றும் புதிதாய் சாக்ஷியம் வேண்டியதில்லை யென்பதும்.

வியாஜ்ஜியச் சுருக்கம்.—பெஜவாடா டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டார் 1910-ஷுத்திய 5 நெ. இன்ஸால்வென்ஸ் பிடிஷனில் 1911-ஷுத்திய 1122 நெ. மிஸ்ஸெல்லேனியஸ் பிடிஷன் பேரில் பிறப்பித்த உத்திரவின் பேரில் 1912-ஷு பிப்பிரவரிமீ 20௳யுள்ள 1911-ஷுத்திய

23-நெ. மிஸ். அப்பீலில் மசூலிப்பட்டணத்தி லுள்ள கிருஷ்ணா ஜில்லா கோர்ட்டு உத்தி ரவை மாற்றும்படி ஐகோர்ட்டை பிரார்த்திக் கிற 1907ஞூ III-வது ஆகட்டு 46 (1) வது பிரிவின் கீழ் பிடிஷன்.

தீர்ப்பு:—டிஸ்டிரிக்ட் ஜட்ஜியானவர் செய்த உத்திரவு சட்ட விரோதமென்ற அமசத்தை இந்த கேசில் நான் கண்டறியவேண்டியிருக்கி றது. இன்ஸால்வென்ஸ் நடவடிக்கை நடத்து கையில் ஏற்பட்ட சாக்ஷியின் பேரில் ஏலம் நடந்தகாலத்தில், அந்த கடனை அடைக்க சக் தியற்ற அந்த கடன்காரன் தன் கடனைத்தீர் க்கும்படியான நிலைமையில் இல்லையென்று முடிவுசெய்துக்கொண்டார். மேலும் இதர கடன்காரர்கள் அவர்களுடைய சொத்தில் அவர்களுக்குண்டான பாகத்தை அடைய வி டாமல் செய்யும்படி இந்த மனுதாரனும் கடன் காரனும் மோசவிதமாய் ஏற்பாடு செய்துக் கொண்டதாக இந்த வியாஜ்ஜியத்தில் ஏற்படும் இதர சந்தர்ப்பங்களையும் ஜில்லா ஜட்ஜானவர் எடுத்துக்காட்டுகிறார். மேல்படி இன்சால் வென்சி நட வடிக்கைகளின் போது ஏற்பட்ட சாக்ஷியத்தை, ப்ரோவின்ஷல் இன்ஸால்வெ ன்ஸ் ஆக்டின் 37-வது பிரிவின்படி அக்கடன் காரன் கடனடைக்கச்சக்தியற்றவனென்று தீர்மானிக்கும் விஷயத்தில், நான் எடுத்துக் கொள்ளக்கூடாதென்றும் புதிதாக சாக்ஷி விசாரிக்கவேண்டு மென்றும் கோரப்பட்டிருக் கின்றது. இப்படி கோருவதற்கு யாதொரு ஆதாரத்தையும் எனக்கு எடுத்துக்காட்டப் படவில்லை. ஜில்லா ஜட்ஜி இந்த கேசில் தம க்கு ஏற்பட்ட சாதகங்களை அனுசரித்து நான் மேலே குறிப்பிட்ட அபிப்பிராயத்தையேகொ ண்டிருக்கிறார். அவருடைய தீர்ப்பை மாற்ற எனக்கு யாதொரு நியாயமும் தென்பட வில் லை. இந்த ரிவிஜன் மனுவை செலவுள்பட தள்ளிவிட்டிருக்கிறேன்.

MADRAS HIGH COURT.

மதரூஸ் ஹைகோர்ட்டு.

1914-ஞுத்திய சிவில் ரிவிஜன் மனு நெ. 622

1914-ஞு பிப்ரவரிமீ 16-ந் தேதி.

ஜட்ஜி—மிஸ்டர் சதாசிவய்யர்.

ஆதிராஜசெட்டி—மனுவுதார்.

v.

விட்டல் பட்டா—பிரதிவாதி.

விஷயும்:—ஒப்பந்தம்— பிரதிபலன்—ஜன சமுதாயத்திற்கான கடமையைச் செய்வதற்கு, பரிகாரப் பணம்—ஒரு நியாயஸ்தலத்தில் சா க்ஷியும் கொடுப்பது பொது ஜன விவகாரம்.

சங்கிரகம்:—ஒரு வியாஜ்ஜியத்தில் வாதி யின் சிநேகிதர்கள் பிரதிவாதி பக்ஷம் சாக்ஷி சொல்ல ஒப்புக்கொண்ட வகையில் பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஒரு கைக்கடன் சீட்டின் பேரில் வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியம் கிரம மான பிரதி பலனுக்கானதல்ல ஆகையால் செல்லத்தக்கிறதல்ல என்று தீர்கப்பட்டது.

காரக்கால் டிஸ்டிரிக்டு முன்சிபு கோர்டாரால் 1912-ஞுத்திய 33-நெ. (S. C. S.) சில்லறை வியாஜ்ஜியத்தில் பிறந்த தீர்ப்பை மாற்றும்படி ஹைகோர்ட்டாரைக் கோறி 1887-ஞுத்திய IX ஆக்ட்டு 25-வது பிரிவின் கீழ் தாகலான மனு.

தீர்மானம்:—A என்பவன் B என்பவனுக்கு தனம் கொடுப்பதாய் ஒப்புக்கொள்ளுகிற ஒரு வாக்குத்தத்திற்கு B என்பவன் தனக்கும் C என்பவனுக்கும் நடந்திருந்த ஒரு ஒப் பந்தத்தை அனுசரித்து அதற்கு முன்னமே தன்னால் தனியே ஏற்படுத்திக்கொண்டிருந்த ஒரு கடமையை நிறை வேற்று வதானது கிரமமான பிரதி பிரயோஜனமாகுமா என்கிற அம்சத்தைக் குறித்து பல கோர்ட்டார்கள் பலவிதமாக அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். (ரிவைசுடு ரிபோர்ட்டுகள் 604-ல் 127 ஷாட்

வெல்லுக்கும் ஷாட்வல்லுக்கும் நடந்த வியாஜ்ஜியத்தை, போலாக்கு எழுதிய இந்திய கண்டிராக்டு ஆக்டு 3-வது பதிப்பு 155-ம் பக்கம் பார்க்க) ஆனல் B என்பவன் பொது நன்மைக்காக செய்ய ஒப்புக்கொண்ட வாக்குத்தத்தமானது (இந்த வியாஜ்ஜியத்தில்--இந்த கேசில் சாக்ஷியம் சொல்லுவது) A என்பவன் C என்பவனுக்கு ஏதோ பொருள் கொடுப்பதாக செய்திருந்த வாக்குத்தத்திற்கு சரியான பிரதி பிரயோஜனமாக மாட்டாது. அப்படி செய்துக்கொண்ட ஒப்பந்தம் பொய்யானதும் ஏய்ப்பதற்கானவுமான ஏற்பாடே ஒழிய வேறில்லை யென்பதும் என்னுடைய அபிப்பிராயம் (போலாக்கு எழுதிய இந்திய கண்டிராக்டு ஆக்டு 3-வது பதிப்பு 26-ம் பக்கம் பார்க்க). B என்பவனுக்கு சாதாரண சட்டத்தினல் விதிக்கப்பட்ட கடமை விஷயத்தில் ஷை கடமையை அவன் நிறைவேற்ற அவனுக்காவது வேறொருவருக்காவது பிரதிபலனை பொருள் கொடுக்கும் ஒப்பந்தம், பொதுஜன விவகாரத்திற்கு விரோதமாயிருப்பதினல் பயனற்றதென்பதும் என்னுடைய அபிப்பிராயம்.

இந்த ரிவிஷனில் மனுவுத்தாரன் வாதியாயிருந்தான். (முன்னல் ஒரு வியாஜ்ஜியத்தில் சம்மந்தப்பட்டவனை) பிரதிவாதிக்காக சாக்ஷியம்—வாஸ்தவமான சாக்ஷியமென்றே நான் வைத்துக்கொள்ளுகிறேன் — சொல்ல வாதியின் சினேகிதர்கள் ஒப்புக்கொண்டதிற்காக ஷை பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஒரு பிராமிசரி சீட்டின்பேரில் கொண்டு வரப்பட்ட வாதியின் வியாஜ்ஜியத்தை கீழ் கோர்ட்டார் தள்ளுபடி செய்தது கிரமம் தான்.

இந்த மனுவை செலவுள்பட தள்ளுபடி செய்திருக்கிறேன்.

MADRAS HIGH COURT.

மதருஸ் ஹைகோர்ட்.

(மாயவரம் சப்கோர்ட்)

மிஸ்டர் பி. எஸ். சேஷய்யர் முன்னில்.

வைத்தீஸ்வரன் கோவில் ஸ்கீம் வியாஜ்ஜியம்.

வைத்தீஸ்வரன் கோவில் தேவஸ்தானத்திற்கு தருமபுரம் மட ஆதீனம் பண்டார சந்நிதி அவர்கள் டிரஸ்ட்டியாக விருந்து வருகிறார்கள். இவர் அந்த தேவஸ்தானத்தின் பணத்தைத் தாறுமாருக செலவு செய்து வருகிறார் என்றும் இன்னும் சில புகார்கள் கிளம்பின காரணத்தை முன்னிட்டு ஆனரபில் அட்வோகேட் ஜெனரல் தருமபரிபாலன கர்த்தா ஸ்தானத்தில் (Protector of Charities) ஷை தேவஸ்தானத்திலிருந்து ஷை தருமகர்த்தாவை நீக்கிப் போடும்படியாகவும் ஷை தேவஸ்தானம் இனிமேல் ஒழுங்காய் மாநேஜ்மெண்டு செய்துவரப்படும் படியாக ஒரு ஏற்பாடு (Scheme) செய்யும் படியாகவும் மாயவரம் சப்கோர்ட்டில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

இந்த வியாஜ்ஜியத்தின் விசாரணை நடந்து வரும்போது கடந்த ஜூன்மாதம் 27-வ பிரதிவாதி இறந்துபோய்விட்டார். இவர் இறந்துபோன நிமித்தம் தருமபுரம் ஆதீனத்திற்கு ஒரு புதிய பண்டாரசந்நதி நியமிக்கப்பட்டார். இவர் பிரஸ்தாப தேவஸ்தானத்திற்கும் தருமகர்த்தாவானர்.

புதியபண்டார சந்நதானத்தை பழைய பிரதிவாதிக்காக பாத்தியப்படுத்தி வியாஜ்ஜியத்தை நடத்தும் படியாக ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு புதிய பண்டார சந்நதியில் ஆக்ஷேபிக்கப்பட்டது. பழைய பண்டார சந்நதி இறந்து போனவுடன் வியாஜ்ஜியம் முடிவடைந்து போய்விட்டதென்றும் அவர் இறந்துபோன பின்பு அவர் பேரால் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்திற்கும் உயிர்

போய்விட்டதென்றும் புதிய பண்டார சந்நதி தரப்பில் கக்ஷி சொல்லப்பட்டது.

சப் கோர்ட்டார் பழைய பண்டார சந்நதியின் பேரில் உண்டான வியாஜ்ஜிய மூலம் அவர் இறந்துபோன பிறகு அவருக்கு சட்டப்படியளவு பிரதிநிதியும் தொடரு மென்றும் ஆதலால் வியாஜ்ஜியத்திற்கு உயிர் இருக்கிறதென்றும் தீர்மானித்து வியாஜ்ஜியம் விசாரணை நடத்தும்படியாக உத்திரவு செய்தார்கள்.

MADRAS HIGH COURT.

மதருஸ் ஹைகோர்ட்.

ஜட்ஜி மிஸ்டர் பேக்வெல் முன்பாக.

ஒரு வார்சு சேர்ட்டிபிகேட் மனு.

லெட்டர்ஸ் ஆப் அட்மினிஸ் டிரேஷன் என்று சொல்லும்படியான வார்சு செர்ட்டிபிகேட்டை கோர்ட்டாரிடமிருந்து பெறுகிறதற்கு லெட்டர்ஸ் ஆப் அட்மினிஸ்டிரேஷன் பெற்றுக்கொள்ளப் போகிற விஷயத்தை சென்னபட்டணத்திலுள்ள முக்கியமான பத்திரிகைகளில் ஒன்றில் விளம்பரம் போட்டு பயிரங்கப்படுத்த வேண்டுமென்பது ஐக்கோர்ட்டு விதிகளில் ஒன்று சிவகாமி அம்மாள் என்கிற ஒரு கக்ஷிக்காரி இந்த விதியை அனுசரித்து லெட்டர்ஸ் ஆப் அட்மினிஸ்டிரேஷன் பெற்றுக்கொள்ளப்போகிற ஸகாயத்தை அந்நகரத்திலுள்ள "நியூ இந்தியா" என்னும் பத்திரிகையில் விளம்பரம் போட்டு பயிரங்கப்படுத்தினள். "நியூ இந்தியா" நகரத்திலுள்ள முக்கியமான பத்திரிகைகளில் ஒன்று அல்லவென்று அசல் தரப்பு டிப்டி ரிஜிஸ்டாராக விருக்கும் மிஸ்டர் அட்கின்சன் சொல்லி மறுபடியும் விளம்பரம் போட்டு பயிரங்கப்படுத்தும் படியாக மனுதாருக்கு உத்திரவு செய்தனர். மனுதாருடைய மனு ஜட்ஜி மிஸ்டர் பேக்வெல்லுடைய உத்திரவுக்கு அனுப்பப்பட்டது. மிஸ்டர் வி. வி. சீனிவாசய்யங்கார், மிஸ்டர் வி எஸ். கோவிந்தராஜ முதலியார், மிஸ்டர் எஸ். துரைசாமி அய்யங்கார் ஆகிய இந்த வக்கீல்களுடன் மிஸ்டர் வி. மாசிலாமணி முதலியார் மனுதார் தரப்பிற்கு ஆஜராகி "நியூ இந்தியா" நகரத்திலுள்ள பெரும்பாலான ஜனங்களால் வாசிக்கப்படுகிறதென்றும் ஆதலால் அது முக்கியமான பத்திரிகைகளில் ஒன்று என்று ஒப்புக்கொள்ளப்பட வேண்டுமென்றும் கட்சி சொன்னர்.

ஜட்ஜி மிஸ்டர் பேக்குவெல் இப்பேர்பட்ட ஒரு அற்ப விஷயத்தில் ரெஜிஸ்டிரார் செய்த உத்திரவில் பிரவேசிப்பதற்குத் தமக்கு விருப்பமில்லை என்று சொல்லி மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஒரு ஜீவனும்ச தாவா.

(ஜட்ஜி மிஸ்டர் சங்கர நாயர், ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்.)

வாதி காளஸ்திரி ராஜாவினுடைய சகோதரர் எஸ்டேட்டிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 650 வீதம் ஜீவனும்சம் கிடைக்க வேணுமென்றும் அந்த விகிதப்படி நிலுவை ஜீவனும்சமும் கிடைக்கவேணுமென்று வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். 1890-ல் தற்கால ராஜாவாகவிருப்பவர் அப்போதிருந்த ஜெமீன்தார் பேரில் ஒருபாக வியாஜ்ஜியம் கொண்டு வந்தார். அந்த வியாஜ்ஜியத்தில் மற்ற சகோதரர்களும் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கப்பட்டிருந்தார்கள். அந்த வியாஜ்ஜியம் சமாதானம் செய்துகொள்ளப்பட்டது. சமாதானத்தின் ஷரத்துகள் என்னவென்றால்: (1) எஸ்டேட் பாகிக்கப்படக்கூடாத எஸ்டேட்; (2) சகோதரர் ஒவ்வொருவரும் முதல் 10 வருஷத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 600 விதம் பெற்றுகொள்ள வேண்டும்; (3) பின்புதலே முறைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 700 வீதம் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த ஷரத்துகள் எல்லாம் வியாஜ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - NOV 1914
MADRAS

ஜியத்தில் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயங்களின் வரம்பைத்தாண்டி யிருந்தபடியால், ராஜிநாமா டிக்கிரியில் சேர்க்கப்படவில்லை. இதன்பிறகு 1896-ல் ஜெமின்தார் வாதிக்கு ஒரு உடன் படிக்கை எழுதிக்கொடுத்திருக்கிறார்.

இந்த உடன்படிக்கையின்ஷரத்துகள்என்னவென்றால் வாதிக்கும் அவருடைய வார்சுகளுக்கும் சாசுவதமாய் மாதம் ஒன்றுக்கு ரூ. 650 ஜெமீன்தார் கொடுத்துவரவேண்டும். இந்தத் தொகைக்கு எஸ்டேட் கட்டுப்பட்டதென்று ஜெமின்தார் வாதிக்கு எழுதிக்கொடுத்தார் இந்த ஆதரவும் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. 1899-ம் வருடத்திலிருந்து சிலகாலம் எஸ்டேட்டு கோர்ட் ஆப்வார்ட்சார் தரப்பிலிருந்து வந்தது. அப்போது எஸ்டேட்டின் ஐவேஜி மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400-க்கு மேல் கொடுக்க விடம் கொடுக்கமாட்டாதென்று எண்ணப்பட்டு மாதம் ரூ. 400 வாதிக்கு கொடுக்கப்பட்டு வந்தது. ஆகையால் வாதி ஏற்கனவே ஜெமீன்தாருடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி, அதாவது மாதம் ஒன்றுக்கு ரூ. 650 வீதம் தமக்கு கிடைக்கவேண்டுமென்று இந்த தாவாவைக் கொண்டுவந்தார். வட ஆற்காடு சப் கோர்ட்டார், மாதம் ஒன்று ரூ. 650 வீதம் வாதிக்குக் கொடுத்துவர எஸ்டேட்டில் ஐவேஜியில்லை என்கிற காரணத்தால் அந்த உடன்படிக்கையை ஆக்ஷேபிக்க ஜெமீன்தார் பாத்திதையுடைவர் என்று சொல்லி வாதிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 400 வீதம் ஜீவனும்ச டிக்கிரி கொடுத்தார்கள். வாதி ஐக்கோர்ட்டில் அப்பீல்செய்து கொண்டார். அப்பீல்வாதி தரப்பில் என்னகக்ஷி சொல்லப்பட்டதென்றால், வாதியும் ஜெமீன்தாரும் செய்துகொண்ட உடன்படிக்கையைக் கோர்ட்டார்புறக்கணிக்க முடியா தென்றும், வாதி எஸ்டேட்டைப் பார்த்துகொள்ளுவதற்கு உள்ள பாத்தியதையை விட்டுவிட்டு ரூ. 650 வீதம் ஜீவனும்சம் பெற்றுக்கொள சம்மதித்திருக்கிறார் என்றும், மேலும் எஸ்டேட்டைக் கட்டுப்படுத்தி ஜெமீன்தார் உடன்படிக்கை எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றும் அது சொத்தைப் பராதீனம் செய்ததற்குச் சமமாகிறதென்றும் பராதீனம் செய்ய ஜெமீன்தாருக்குப் பாத்தியதையிருக்கிறதென்றும் அவருடைய வார்சுகள் அந்த உடன்படிக்கையை ஆக்ஷேபிக்க முடியாதென்றும் கக்ஷி சொல்லப்பட்டது. அப்பீல் பிரதிவாதி தரப்பில் உடன்படிக்கை வார்சுகளை கட்டுப்படுத்தும்படியான உடன்படிக்கை யல்லவென்று கக்ஷி பயப்பட்டது. கோர்ட்டார், ஜெமீன்தார் ஜமீனைக் கட்டுப்படுத்தி வாதிக்கு எழுதிக்கொடுத்து பராதீனம் என்று அப்பீல் வாதியின் தரப்பில் சொல்லப்படும் கக்ஷியை ஒப்புக்கொள்ளவில்லை. ஜீவனும்ச வீத விஷயமாக கீழ்க்கோர்ட்டார் செய்திருக்கும் முடிவே இந்தக்கேசிற்குச் சரியான முடிவு என்று தீர்ப்பு சொன்னார்கள். அப்பீல் வாதிக்காக மிஸ்டர் எஸ். சீனிவாசய்யங்காரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் எல். ஏ. கோவிந்தராகவய்யரும் இன்னும் சிலரும் ஆஜரானார்கள்.

இந்தக்கேசில் மூன்றுவது அப்பீல் பிரதிவாதி ஒரு கிராஸ் அப்பீல் செய்துக்கொண்டார். அவருக்காக ராவ்சாகேப் ஜி. வெங்கட்டராமய்யர் ஆஜராகி மூன்றுவது அப்பீல் பிரதிவாதி, வாதியும் ஜமீன்தாரும் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு முந்தியே டிக்கிரி வாங்கி வைத்திருக்கிறார் என்றும், ஆதலால் அவருக்கு முந்திய பாத்தியதை யிருக்கிறதென்று கக்ஷி சொன்னார். எப்படியிருந்தபோதிலும் இவர்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தராயும் ஜீவனும்ச பாத்தியதை யுடைவர்களாக விருக்கிறபடியால் முந்திய பாத்தியதைப் பிந்திய பாத்தியதை என்கிற பிரச்னை இந்தக்கேசில் உண்டாகமாட்டா தென்று தீர்ப்பு சொன்னார்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஐகோர்ட்டு.

சிவில் ரிவிஷன் பிடிஷன் நெ. 254 of 1912.

1914ஞ பிப்பிரவரிமீ 11உ

ஜட்ஜி:—மிஸ்டர் சதாசிவய்யர்.

றவிபதி ருமய்யா—மனுவுதார்.

v.

அட்டன்கி சேஷய்யா வகைரு 2-பேர் } பிரதிவாதிகள்.

விஷயக்குறிப்பு :—நிலத்துக் குடையவனும் குடித்தனக்காரனும் இனும் நிலத்தை சுதந்தரம் பெறல்—தீர்வையை ஜாஸ்திப்படுத்தல்—ஜாஸ்தி தீர்வைகொடுக்க இஜாராதார்கடமைப் பட்டிருப்பது.

மனுவுதார் கோறிக்கையின் பேரில் ஒரு இனும் நிலத்தை சுதந்தரப்படுத் தினதினல் தீர்வை ஜாஸ்திப்பட்டால், ஒரு குறித்த காலவரை ஏற்பட்டிருக்கிற கீழ்குத்தகைதாரிடமிருந்து நிலத்துக்குடையவன் அதிக தீர்வைவாங்க பாத்தியமுண்டாக்கமாட்டாது.

நறசருவுபேட்டை டி. மு. கோர்ட்டார் 1911-வருஷத்திய ஸ்மால்காஸ் வியாஜ்ஜியம் 856 நெம்பரில் செய்த டிக்கிரீயை மாற்றும்படி ஹைகோர்ட்டைக் கோறி 1887-ஞ IX வது ஆக்ட்டு 25-வது பிரிவின் கீழ் கொடுத்துக்கொண்ட மனுவு.

தீர்மானம் :—வாதி கொடுத்துக்கொண்ட இந்த மனு நிற்கதக்கதல்ல. மனுவுதாரன் தன் சொந்த பிரயோஜனதுக்காக தன்னுடைய இனும் நிலத்தை சுதந்தரப்படுத்திக் கொண்டான். அதனல் அந்த நிலத்திற்கு கவர்ண்மெண்டாருக்கு ஜாஸ்தி குயிட்றெண்டு செலுத்தும்படி நேரிட்டது. ஷை நிலத்தை இத்தனை வருஷத்திற்கென்று குத்தகை பெற்றிருக்கிற பிரதி வாதிகளால் ஜாஸ்திப்பட்ட தீர்வையை வசூலிக்கவேண்டுமென்று வாதி கோறுகிருர். மூல்கேணி குத்தகைக்காரனுக்கும் அந்த மாதிரி நிலத்துக்குடையவனுக்குமுள்ள சம்மந்தம் இந்த கேசுக்கு சற்றும் பொருந்தாது. அந்தக் குடித்தனக்காரர்கள் அவர்கள் குத்தகை பெறுங்காலத்தில் என்ன தீர்வை ஏற்பட்டிருந்ததோ அந்த தீர்வையை மட்டும் அவர்கள் குத்தகை காலம் வரையில் செலுத்த ஒப்புக்கொண்டார்கள். அவ்வளவு தான் ஒப்புக்கொண்டிருக்கவும் கூடும் அவர்களுடைய நிலபாத்தியக்காரனுடைய சுயநன்மைக்காக அவனுடைய கோறுதலையின்பேரில் ஜாஸ்திப் படுத்திக்கொண்ட அதிக தீர்வையை அவர்கள் செலுத்த ஒப்பியிருக்கமாட்டார்கள். வாதியின் தாவா சுத்தமாய் நியாயமானதாயில்லை ; ஆகையால் இந்த ரிவிஷன் மனுவை செலவுள்பட தள்ளுகடை செய்திருக்கிறேன்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஐகோர்ட்டு.

1912-ஞுத்திய சிவில் மிஸல்லேனியஸ் அப்ளிகேஷன் நெ. 310.

1914-ஞுத்திய பிப்ரவரிமீ 17உ

ஜட்ஜிகள்:—ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.

ஜஸ்டிஸ் தயாப்ஜி.

ராமசாமி றெட்டி என்கிற வாசுதேவ றெட்டி மைனர். கார்டியன் 2-வது அப்பீல்வாதி பிரசன்னவெங்கிடருமறெட்டி } அப்பீல் வாதி.

v.

நல்லப்ப றெட்டி. அப்பீல் பிரதிவாதி.

குறிப்பு:—இந்தியன் ரிஜஸ்டிரேஷன் ஆக்டு பிரிவு 496 (C)—குத்தகை விடஒப்பந்தம்—ரிஜஸ்டராகாத குத்தகைச் சீட்டு—குத்தகையை ஒப்புக்கொண்ட தாய்ரு சுவுகொடுக்க அந்த சீட்டு ஒப்புக்கொள்ளத்தக்கதா?

சுருக்கம்:—குத்தகை விட செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமானது, அசையாப் பொருளைப் பாதிக்கும்படியான காரியமாயிருக்கிறது. (நாராயணன் செட்டிக்கும் முத்தியால் சேர்வாயிக்கும் நடந்தவியாஜ்ஜியம் 35 மதராஸ் 63 ல் பார்க்க). சட்டத்தின்படி ரிஜிஸ்தர் செய்ய வேண்டிய ஒரு குத்தகை சீட்டு ரிஜிஸ்தராகாதிருந்தால் அதை அந்தமாதிரி ஒப்பந்தத்திற்கு சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளப்படாது.

நாமக்கல் டி. மு. கோர்ட்டில் 1911ஹு த்திய அசல் வியாஜ்ஜியம் 297-ம் நெம்பரில் பிறந்த டிக்கிரியின் பேரில் திருச்சிறுபள்ளி ஜில்லா கோர்ட்டார் 1911ஹுத்திய அசல் வியாஜ்ஜியம் 412-ல் செய்த உத்திரவின் பேரில் செய்யும் சிவில் மிஸல்லேனியஸ் அப்பீல்.

தீர்ப்பு:—இந்த வியாஜ்ஜியம் ரிஜிஸ்டர் செய்யப்படாததும் அதன்படி வாதி தனக்கு குத்தகை பாத்தியமுண்டாயிருக்கிறதென்று ருசு கொடுக்க ஒப்புக்கொள்ளத்தகாததுமான பிரஸ்தாப குத்தகை சீட்டின்படியல்ல. ஆனால் இந்த சீட்டிற்கு முன்னிட்டு ஏற்பட்டிருந்த ஒரு குத்தகை சீட்டை அனுசரித்து தாக்கல் செய்யப்பட்டதென்று கற்றறிந்த ஜில்லா ஜட்ஜிகொண்ட அபிப்பிராயம் சரியானதென்று எங்களுக்குத்தோன்றுகிறது. டிஸ்டிரிக்கட்டு ஜட்ஜியானவர் இந்த கேசைபுனர் விசாரணைக்காக திருப்பி அனுப்பியது சரிதான்.

ஆனால் அந்த ரிஜிஸ்தரில்லாத குத்தகைச் சீட்டு, முன்னிட்டு குத்தகைக்குவிட நடந்த ஒப்பந்தத்திற்கு சாக்ஷியமாயிருக்கிற தென்று அபிப்பிராயப்பட்டது தப்பு. (எங்களைக் கட்டுப்படுத்துகிற) நாராயணன் செட்டிக்கும் முத்தையா சேர்வாயிக்கும் நடந்த வியாஜ்ஜியத்தினால், குத்தகை கொடுக்க செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தமானது அசையாப் பொருளைபாதிக்கிற காரியமென்று ஏற்படுகிறது. ரிஜிஸ்தராகவேண்டிய ஒரு தஸ்தாவேஜி ரிஜிஸ்தராவிட்டால் அதை அசையாப்பொருளை பாதிக்கும்படியான ஒரு விவகாரத்தில் சாக்ஷியமாக உபயோகிக்கக்கூடாது. (இந்தியன் ரிஜிஸ்திரேஷன் ஆக்ட்டு 49-வது பிரிவு (C) வாக்கியத்தை பார்க்க). இதே காரணத்தினால் ரிஜிஸ்தராகாத ஒரு தஸ்தாவேஜை குத்தகை விடுவதாக ஏற்பட்ட ஒரு ஒப்பந்த விஷயத்திலும் சாக்ஷியமாக உபயோகப்படுத்த முடியாது.

இத்தியாதி விஷயங்களை யோசித்து இந்த அப்பீல் செலவுகளுடன் தள்ளுகடை செய்யப்பட்டது.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஐகோர்ட்டு.

1913ஹுத்திய 661நெ. சிவில் ரிவிஷன்பிடிஷன்

1914ஹு பிப்பிரவரிமீ 18உ.

ஜட்ஜ்:—ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

மிட்டாதார் வெங்கோபருயர் வகையரு 2 பேர்கள்	மனுவு தார்கள்.
v	
மிட்டாதார் கதரியப்ப கவுண்டர் வகையரு	பிரதி வாதிகள்.

விஷயகுறிப்பு:—சி. பு. கோட் (1908ஹுத்திய V-வது ஆக்டு), ஆர்டர் X, ரூல் 8—வாதியும் சாக்ஷிகளும் கையர் ஆஜர்—வக்கீல் வாயிதா கேட்கிறது—வியாச்சியம் தள்ளுகடை—மறுபடி தாக்கலாகிறது—உத்திரவின் சொரூபம்.

சுருக்கம்:—வாதியும் அவனுடைய சாக்ஷிகளும் ஹாஜரில்லாத காரணத்தினால் வாதிவக்கீல் வியாஜ்ஜியத்தை நடத்த வேறே வாய்தா கொடுக்கும்படி கோறிய விஷயத்தில், கோர்ட்டார் ஷை வியாஜ்ஜியத்தை தள்ளுகடை செய்துவிட்டார்கள். அப்படிசெய்த தள்ளுகடை உத்திரவு எவ்விதமான வார்த்தைகள் அதில் உபயோகித்திருந்தாலும் அது IX-வது ஆர்டர்8-வது ரூலின்படி செய்த உத்திரவென்றே கொள்ளப்படும். அந்த கேசை மறுபடி தன்

பைலில் எடுத்துக்கொள்ள அந்த முன்சீபுக்கு அதிகாரமுண்டு. கோபால ருவுக்கும் மேரியா சூசைப்பிள்ளைக்கும் நடந்த கேசு 30 மதராஸ் 274 உதகரிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி டி. மு. கோர்ட்டில் 1910-ஸு அசல் வியாச்சியம் 16-ல் 1912-த்திய O. S. P. 1495 நெம்பரில் பிறந்த உத்திரவை மாற்றும் படி ஹைகோர்ட்டைக் கோறி 1908-ஸுத்திப V-வது ஆக்டு 115-வது பிரிவின் கீழ் கொடுத்துக்கொண்ட மனுவு.

தீர்ப்பு.—இந்த கேசில் கேட்கவேண்டிய அம்சம் என்னவென்ருல் 1912-ஸு நவம்பர் 6வ யுள்ள டிஸ்திரிக்டு முன்சீப்புனுடைய தீர்மானம் IX-வது ஆர்டர் 8-வது ரூலின் படியா அல்லது XVII-வது ஆர்டர் 3–வது ரூலின்படியா என்பது தான். அதுமுன் சொன்ன ரூலின்படி யென்ருல் அதை திருப்பி தம் பைலில் எடுத்துகொள்ள அவருக்கும் அதிகாரமுண்டு. அந்தப்படியே அவர் 1913ஸு மார்ச்மீ 31வ எடுத்துக்கொண்டுவிட்டார். ஆனுல் XVII-வது ஆர்டர் 3-வது ரூலின்படி யென்ருல் கக்ஷிக்காரனுக்குள்ள பரிகாரமெல்லாம் அப்பீல் செய்துக்கொள்ளுவது தான். கௌரா பீப்க்கும் காசீதாவுக்கும் நடந்த வியாஜ்ஜியம். இந்த பிரஸ்தய கேசில் டிஸ்டிரிக்டு முன்சீப்புனுடைய ஆர்டர் IX-வது, ஆர்டர் 8-வது ரூலின்படி செய்யப்பட்டதென்று நான் முடிவுசெய்துக்கொண்டேன். கேசை திருப்பி எடுத்துக் கொள்ளக்கோறும் விண்ணப்பத்திற்கு ஆதாரமாக தாக்கலான உறுதி மொழி பத்திரிகையில் (affidavit) தானும் தன்சாக்ஷிகளும் ஆஜரிருக்கவில்லை யென்று சொல்லியிருக்கிருன். எதிர் மனுவுதாரனுக்கு இந்த விண்ணப்பம் வந்திருப்பதாக நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. தான் ஹாஜரில்லையென்று வாதி சொல்லியதை அவன் மறுதளிக்கவில்லை. வாயிதா கேட்டுக் கொள்ளும்படி மட்டில் வாதி தன் வக்கீலுக்கு கற்பனை கொடுத்திருந்தான். இது முன்சீபின் தீர்மானத்தினலேயே ஏற்படுகிறது. ஆகையால் வியாச்சியத்தை தள்ளுகடை செய்ய உத்திரவானதும் IX-வது ஆர்டர் 8வது ரூலின் கீழ் என்று ஏற்படுகிறது. முன்சீபு அதன்படி வியாச்சியத்தை தன் பைலில் மறுபடி எடுத்துக் கொண்டது நியாயமே. "ருசுபண்ண வேண்டியகடமை வாதியைப் பொறுத்ததென்று" முதலாய் முன்சீபானவர் தீர்மானத்தை ஆரம்பித்திருப்பதும் அந்த தீர்மானத்தின்மேல் டிக்கிரி கொடுத்திருப்பதும் பார்த்தால் அவர் ஷை கேசை IX-வது ஆர்டர் 8-வது ரூலின்படி அல்லாமல் XVII-வது ஆர்டர் 8-வது ரூலின்படியே நடத்த உத்தேசித்ததாய் தெரியவருகிறதென்றும் மேஸ்தர் கிருஷ்ணசாமி அய்யர் வாதிக்கிருர். கோபால ருவுக்கும் மேரியா சூசைப்பிள்ளைக்கும் நடந்த வியாஜ்ஜியத்தில் கற்றறிந்த சீப் ஜஸ்டிஸ் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிற படி ஒரு ஆர்டரை யெழுதியிருக்கும் பாஷாரூபத்தினலேயே IX-வது ஆர்டர் 8-வது ரூலின்படி அந்த ஆர்டர் பிறந்ததல்ல வென்று சொல்லக்கூடாது. டிக்கிரி கொடுத்த பின்பு விவகாரம் அதற்கு மேல் செல்லத்தக்கினதல்ல. கற்றறிந்த சீப் ஜஸ்டிஸ் பின்னும் எடுத்துரைப்பதாவது: "ஒரு கேசை திரும்பி தாக்கல் செய்துக்கொள்ளுவதற்கான சட்டத்திற்கு தயாளமான வியாக்கியானம் செய்ய வேண்டியது." இந்த கேசில் வாதியானவன் ஹாஜரில்லாதிருந்ததும், வக்கீலை வாயிதாகேட்கும்படி மட்டும் அவருக்கு கற்பனை கொடுக்கப் பட்டிருந்ததாகையால் அவர் கேசை நடத்தக் கூடவில்லை யென்பதும், யோசிக்குமளவில் IX-வது ஆர்டரின்படியே இந்த வியாஜ்ஜியத்தை டிஸ்டிரிக்டு முன்சீபு தள்ளுகடை செய்திருப்பதாக நான் அபிப்பிராயப்படுகிறேன். 30-வது மதராஸ் 274ஐ அனுசரித்து முன்சீபு செய்தது சரியென்றும் வியாஜ்ஜியத்தை

மறுபடி அவருடைய பைலில் தாக்கல் செய்துகொள்ள அவருக்கு அதிகாரம் இருந்ததென்றும் நான் தீர்ப்பு செய்து செலவுடன் பிடிஷனை தள்ளுகடை செய்கிறேன்.

பிடிஷன் தள்ளுகடை செய்யப்பட்டது.

MADRAS HIGH COURT,

மதராஸ் ஐகோர்ட்.

O. S. A. No. 65 of 1913.

1914ளு ஏப்பிறல்மீ 2வ

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் ஆர்னுல் ஒய்ட்.. ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்டு.

சொர்னம்மாள் .... அப்பீல்வாதி.

v.

மதராஸ் அபீஷல் அசைனி-அப்பீல்பிரதிவாதி

குறிப்பு:—பிரசிடென்சி இன்ஸால்வன்ஸி ஆக்ட்டு, 36-108-வது பிரிவுகள்—36-ம் பிரிவின் அர்த்தம்—3-வது கக்ஷிகளின் பாத்தியதையைப் பற்றிய தீர்ப்பு.—

சுருக்கம்:—கடனிருக்கச் சக்தியற்ற கடன்காரர் கேசில் 3-வது பார்டி தனக்கு ஏதோ பாத்தியதையைக் கொண்டாடினால் அந்தப் பாத்தியதையை ஆபீஷல் அசைனி ஆக்ஷேபிக்க கோறுகையில் அதுவிஷயமாய் தீர்ப்பு சொல்ல பிரசிடென்சி இன்ஸால்வன்ஸி ஆக்டின் 36-வது பிரிவின்கீழ் கோர்ட்டாருக்கு அதிகாரம் இல்லையென்பது—108-வது பிரிவின்கீழ் ஷை கடன்காரன் சொத்துகளை பரிபாலனம் பண்ணுவதற்காக நடத்தப்படும் நடவடிக்கைகளுக்கு 7-வது பிரிவு செல்லாது

ஹானரபில் ஜஸ்டிஸ் பேக்வெல் 1913ளு மார்ச்சிமீ 27வ இன்ஸால்வன்ஸி அதிகாரத்தை முன்னிட்டு செய்த உத்திரவின்பேரில் அப்பீல்.

அப்பீல் வாதி வக்கீல் நூஜெண்டு கிராண்டும், சுப்பய்யசெட்டியும்.

ஷை பிரதிவாதி வக்கீல் D. ஷாமியரும் K. இராமனுத சேனுயும் இவர்களுக்கு உதவி G. A. டியூக்கு.

தீர்மானம்.

சீப் ஜஸ்டிஸ்:—இந்த கேஸில் இறந்துபோன முருகப்பிள்ளை என்பவருடைய சொத்துக்களை இன்ஸால்வன்ஸி ஆக்டு 108-வது பிரிவின்படி கீழ்கோர்ட்டார் எடுத்துக்கொண்டு அதை கடன்காரர்களுக்காக பரிபானம் செய்யவேணுமென்று தென்இந்தியா ஏற்றுமதி கம்பெனியார்விண்ணப்பம் செய்துகொண்டார்கள் (தென்இந்திய ஏற்றுமதி கம்பெனி என்பதற்கு கம்பெனி என்றே இந்த தீர்ப்பில் பேசுவேன்). ஷை இறந்துபோன கடன்காரரால் அவர் மரணகாலத்தில் ஷை கம்பனியாருக்கு 50,000 ரூபாய் கொடுப்பலாயிருந்ததென்று ஷை விண்ணப்பத்தில் கண்டிருக்கிறது. அந்தப்படி கம்பெனிக்குச் சேரவேண்டிய தொகைக்கு ஆதாரமாக தோல்களையும் இன்னும் இதர சாமான்களையும் அடமானம் வைக்கப்பட்டிருந்ததாயும், சில சொத்துகளுக்குச் சம்மந்தமான (title-deeds) தஸ்வேஜிகளையும் கம்பெனியாரிடம் வைத்திருந்ததாயும் ஷை விண்ணப்பத்தில் சொல்லியிருக்கிறது. ஆனல் மேல்கண்டபடி ஈடுவைத்த சொத்து முதலியது எல்லாம் சேர்ந்து 30,000 ரூபாய்க்கு மேலாகாதென்றும் மீதியை ஆதாரமில்லாத கடனுக பாவிக்க உத்திரவாகவேணுமென்றும் கம்பெனியார் கோறுகிருர்கள். இந்த விண்ணப்பத்தின்பேரில் பிறந்தஉத்திரவானது 108 வது பிரிவின்படிச்செய்யப்பட்டது. 109-பிரிவு, உப்பிரிவு 1-வதில் பின்வருமாறு சொல்லியிருக்கிறது. இறந்துபோன ஒரு கடன்காரனுடைய ஆஸ்தியை பரிபாலனம் பண்ணுவதைக் குறித்து ஒரு உத்திரவு பிறந்தஉடனே, அப்பேர்பட்ட கடன்காரனுடைய ஆஸ்தியானது ஆபீஷல் அஸைனியின் மூலமாய் கோர்ட்டார்

சுவாதீனப்பட வேண்டு மென்றும் அதன் பேரில் ஷை ஆக்டின் நிபந்தனைகளின்படி கோர்ட்டார் வசூல்செய்து கடன்கார்களுக்கு பகிர்ந்துக் கொடுக்க வேண்டியது என்றுமே 2-வது உப்பிரிவுபடி பின்னால் சொல்லியிருக்கும் மாறுதலுக்குள்பட்டு III-வது பங்கில் சொல்லியிருக்கப்பட்ட நிபந்தனைகள் எல்லாம் சக்தியற்ற கடன்காரன் கேசுக்கு சம்மந்தப்பட்டவரையில் இந்த ஆக்டின்கீழ் அவனுடைய சொத்துக்களை பரிபாலிப்பதற்கு அன்வயப்படுவது போலவே இந்த ஆர்டருக்கும் அன்வயமாகவேண்டும். இந்த உத்திரவு பிறப்பித்த கொஞ்ச காலத்திற்கெல்லாம் அபீஷல் அஸைனி அதை அமுலுக்கு கொண்டுவர வேணுமென்று நோட்டிஸ் பெற்றுக்கொண்டார். அந்த நோட்டிஸை இரண்டு திறத்தாருக்கும் சர்வ் செய்யப்பட்டது. ஒன்று இறந்துபோனவருடைய பெண்சாதிக்கும் மற்றொன்று அந்தம்மாளுடைய சகோதரனென்று சொல்லப்பட்டவருக்கும் சர்வ் செய்யப்பட்டது. அந்தம்மாளுடைய சகோதரனுக்கு சம்பந்தமான லாவாதேவியைப் பற்றி இப்போது பிரஸ்தாபிக்க வேண்டியதில்லை. அந்தம்மா விஷயத்தைப்பற்றிதான் நாம் இப்போ யோசிக்கவேண்டியது. ஷை நோட்டீஸ் பெற்ற தேதி 1912ஹு டிசம்பர்மீ 4உ அதில் சிலசொத்துக்களை அந்தம்மாள் பேரில் நாமகார்த்தமாக மட்டில் கிரயம் வாங்கியிருப்பதாகவும் வாஸ்தவத்தில் அவை இறந்து போனவருடைய சொந்தமென்றும் ஆகையால் அவைகளை அபீஷல் அஸைனி வசப்படுத்த உத்திரவாக வேணுமென்றும்கோரப்பட்டிருக்கிறது. அந்த நோட்டிஸ் சார்வ் செய்ய 1912ஹு டிசம்பர்மீ 9உ வரையில் வாயிதா கொடுக்கப்பட்டிருந்தது. ஷை நோட்டீசுடன் அடியில்கண்ட குறிப்பு சேர்க்கப்பட்டிருந்தது. அதாவது, இந்த நோட்டீஸ் அபீஷல் அஸைனியினால் பிறப்பிக்கப்பட்டது. அதற்கு ஆதாரம் அவருடைய ரிபோர்ட்டும் கண்ணால்பார்த்த சாக்ஷிகளின் வாய்மொழி சாக்ஷியமும் என்பதே. அபீஷல் அஸைனியின் ரிபோர்ட்டு எவ்வளவுமட்டில் சாக்ஷியமாக கொள்ளப்படலாம் என்பதைப் பற்றி நான் இப்போது ஒன்றும் சொல்லுவதில்லை. ஆனால் ஷை நோட்டிஸ் டிசம்பர்மீ 9உ வாபீஸ் செய்யப்பட்டது. அவருடைய ரிபோர்ட்டு 14உ எழுதப்பட்டது அந்த நோட்டீஸ் திரும்பிவந்த அன்றைய தினமே இந்த விண்ணப்பம் விசாரணைக்கு வந்திருந்தால் அந்த ரிபோர்ட்டில் கண்ட அம்சங்களுக்கு அந்தம்மாள் எதிர்வாதம் செய்ய எப்படி கூடுமாயிருக்கும். ஆனால் அடுத்த பிப்ரவரி மாதம் வரையில் ஷை நோட்டிஸ் விசாரணைக்கு வரவில்லை யென்றும் தெரியவருகிறது. கற்றறிந்த ஜட்ஜியின் உத்திரவை காயபடுத்த வாதிக்கவந்த மிஸ்டர் ஷாமியர் ஷை விண்ணப்பம் கடன்காரர்களின் பொருட்டாகவும் அவர்களுடைய நன்மைக்காகவும் செய்யப்பட்டதென்று வாதித்தார். கம்பனியாருக்கு இருக்கும் ஆதாரப் பொருள்களை நிலைப்படுத்த வேண்டியது என்பது கடன்காரர்களின் பொது நன்மைக்கான விஷயமென்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் அந்த ஆஸ்தியின் பேரில் இருக்கிற கடன் குறைந்து கடன் கொடுத்தவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கக் கூடிய மீதி மொத்தம் ஜாஸ்திப்படும். அபீஷல் அஸைனி போட்டிருக்கும் விண்ணப்பம் பலித்தால் மேற்சொல்லிய நன்மையே மட்டும் கடன்காரர்களுக்கு உண்டாகுமென்று எனக்குத் தோன்றுகிறது. இன்னொரு விதத்தில் பார்த்தால் கம்பெனிக்கு இந்த விண்ணப்பத்தினால் இன்னும் பலமான நன்மை ஒன்று உண்டாகும். அதாவது அவர்களுக்கு ஈடுகாட்டியிருந்த சொத்துக்கு லோபம் வருவதாயிருந்தது ; ஆனால் அந்த கற்றறிந்த ஜட்ஜியானவர் செய்த உத்திரவின்பயன் அந்த ஈடுமானம் சலனமற்றதென்று உத்திரவுசெய்தாப்போலா

கிறது. இது விஷயத்தில் ஷை ஜட்சியானவர் செய்த தீர்ப்பு என்னவென்றுல் சக்தியற்ற கடன்காரனுடைய சொத்து நாமகார்த்த மாகவே அந்த இறந்துபோன கடன்காரனு டைய மனைவியாகிய சொர்னம்மாள் பேரிலிருப்பதாக சாக்ஷியத்தினுல் ஏற்படுகிறதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன் என்பதே. முதலில் இந்த விண்ணப்பம் தாக்கல் செய்தது மிஸ்டர் ஷாமியர் சொல்லுகிறபடி கடன்காரர்களுடைய நன்மைக்காக என்று உத்தேசிக்கப்பட்டதல்ல. ஆனுல் இறந்துபோனவன் ஷை கம்பெனிக்கு அடமானம் வைத்திருந்த சொத்துகள் அதுகளை விற்றுல் தொகை எழும்பத்தக்க ஈடுமான சொத்தென்று கோர்ட்டு உத்திரவினுல் நிர்த்தாரகம் செய்துக்கொள்வதற்காகவே செய்யப்பட்டதென்று நினைக்கத் தக்கினதாயிருக்கிறது. ஆனுல் எப்படி நினைக்கவும் ஆதாரம் ஏற்படவில்லை.

நோட்டீசுக்காக கேட்கப்பட்ட காலத்திலிருந்த காரியங்களின் நிலைமை எனக்குத்தெரிந்தவரையில் பின்வருமாறு ஏற்படுகிறது. ஷை கம்பெனிக்கு அடமானம் வைத்திருந்த சொத்து சரியான ஈடுகாட்டி அடமானமென்று வாதிக்கப்படுகிறது. ஷை விண்ணப்பத்தில் கண்ட வீடானது ஷை அடமானத்தில் சேர்ந்தது. அந்த அடமானம் இறந்துபோனவராலும் அவருடைய மனைவியினுலும் எழுதிகொடுக்கப்பட்டது. அதற்கு ஆதாரவு தஸ்தாவேஜிகள் ஷை இறந்தவன் பெண்சாதி பேரில் பிறந்திருக்கின்றன, இப்படி இருக்கையில் கம்பனியார் 12-வது பிரிவுபடி நடவடிக்கை ஏன் நடத்தவில்லையோ எனக்குத் தெரியவில்லை. ஒருக்கால் அவர்களுக்கு ஈடு காட்டிய ஷை சொத்தை விடுதலை செய்ய அவர்களுக்கு இஷ்டமில்லாதிருந்தால் அந்த சொத்தின் கிரயத்தை மதிப்பிட்டு அந்த மதிப்பு தொகை போக பாக்கியிருக்கிறதை ருசுப்படுத்தி அதன்பேரில் தங்களுக்கு ஏற்படும் அடமான சொத்தின் பேரில் வரவேண்டிய மொத்தத்தை வரப்படுத்த அவாள் ஏன் நடவடிக்கை நடத்திருக்கக்கூடாதோ அதுவும் தெரியவில்லை. ஷை அடமானத்துக்கு ஷை இறந்தவன் பெண்சாதியும் உள்பட்டவளானதால் மூலதஸ்தாவேஜிகள் அந்தம்மாள்பேரில் இருந்ததென்றுலும் அந்த கம்பனியார் அந்தப்படி அடமான சொத்தில் அவாளுக்குள்ளதை வரப்படுத்திக்கொள்ள தடையாயிராதென்று எனக்குத் தோன்றுகிறது. அவாள் அந்தப்படி வசூல் செய்யத் தலைப்பட்டால் ஷை அம்மாள் அந்த அடமான தஸ்தாவேஜில் தன் கையெழுத்தை மோசவிதமாய் வாங்கிக் கொண்டதாக வேறே வியாஜ்ஜியம் கொண்டு வரவேண்டியிருக்கும். அந்தமாதிரி வியாஜ்ஜியம் செய்து அதை ஸ்தாபிக்கிற வரையில் கம்பெனியாருக்கு ஷை அடமானம் செல்லத் தக்கதாயிருக்கும் அவாளும் அதன்பேரில் பணம் வசூல்செய்ய பாத்தியமுள்ளவர்களாயிருப்பார்கள். ஆனுல் அந்தப்படி நடத்தப்படவில்லை. இந்த விண்ணப்பம் விசாரணைக்கு வந்தகாலத்தில், ஷை அம்மாள் தரபில்வந்த மேஸ்தர் கிராண்டு கேசிலுள்ள சாதக பாதகங்களை எடுத்துப் பேசவில்லை. ஆனுல் பிரஸ்தாப உத்திரவை கொடுக்க கோர்ட்டாருக்கதிகாரமில்லையென்றுமட்டும் வாதித்தார். ஷை உத்திரவை 36-வது பிரிவின் கீழன்றி வேறே பிரிவின்படி கொடுக்கும்படி கேட்டதாக வாதிக்கப்படவில்லை. கற்றறிந்த ஜட்ஜியானவர் ஷை பிரிவையே தம்முடைய தீர்மானத்தில் உதகரித்திருக்கிறுர். 36-வது பிரிவின்கீழ் அபீஷல் அஸைனி கோர்ட்டாரிடம் சம்மேரியாக உத்திரவு பெற்று ஷை சொத்துக்களை தமக்கு ஒப்பிவிக்கும்படிசெய்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறுர். அந்த ஜட்ஜியானவர் 7-வது பிரிவையும் இதற்கு ஆதாரமாக உதகரிக்கிறுர்.

36-வது பிரிவு வெளியிடுவதற்கான பிரிவு யென்பது நாம் முன்னமே சொல்லியப்படி நம்முடைய அபிப்ராயம். கடன் இருக்கச் சக்தியற்ற கடன்காரனுக்குச் சம்மந்தமான சொத்தென்று வெளிப்படுத்தும்படியான அல்லது முதல் பார்வைக்கு இதராளுக்குச் சம்மந்தப்பட்டதாக காணப்படும் சொத்தை கடனிருக்கச் சக்தியற்ற கடன்காரனுக்குரிமையான தென்று கோர்ட்டார் உத்திரவை பெற அபீஷல் அஸைனிக்கு ஷை பிரிவு சக்தி யுண்டாக்கும். தீர்க்கச் சக்தியற்ற கடன்காரனுக்கும் 3-வது மனுஷியாளுக்கும் உள்ள பாத்தியா பாத்தியத்தை நிர்ணயம் பண்ணும்படியான உத்திரவையளிக்க கோர்ட்டாருக்கு அந்த பிரிவின்படி அதிகாரம் இல்லை. அதுவும் 3-வது பார்டி தனக்கு பாத்தியம் என்று சொல்லி அதை அபீஷல் அஸைனி ஆக்ஷேபிக்கிறதாயிருந்தால் ஷை செக்ஷன் மேல் கண்டபடி கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுப்பதில்லை. இந்த பாத்தியா பாத்தியங்களை நிர்த்தாரகம் பண்ணுவதற்காக நடவடிக்கை நடத்தும் விஷயமாய் வேறே பிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு விஷயத்திற்கும் வேறே செக்ஷன்களிருக்கின்றன. அதாவது பார்டிகள் சம்மதமாய் பைசல் செய்துக் கொள்ள ஒரு செக்ஷன். மோசவிதமாய் ஒருவருடைய பாத்தியத்தைக் காட்டிலும் மற்றொருவருக்கு பாத்தியம் அதிகமென்றால் அதைப்பற்றிய செக்ஷன் வேறே இதுவன்றி ஒருகாரியம் மோசவிதமாய் நடந்ததென்றுவது அல்லது அந்த நடவடிக்கை இன்ஸால்வன்ஸி ஆக்டின் பொது அர்த்தத்துக்கு விரோதமென்றுவது அந்த காரியத்தை தள்ளுகடைசெய்யக் கோறி சரியானபடி மனுவு கொடுத்துக்கொண்டால் அந்தப்படி உத்திரவு செய்ய, கோர்ட்டாருக்கு பொதுவாக அதிகாரமும்உண்டு. அந்த செக்ஷனுக்கு நான் இப்படித்தான் அர்த்தம் செய்கிறேன். 1883ளு த்திய இங்கிலீஷ் ஆக்டு 27-வது பிரிவு இதற்கு ஒப்பானது. அந்த பிரிவுக்கு இந்தப்படிதான் அர்த்தம் செய்திருக்கிறதாக நான் நினைக்கிறேன். இந்த அர்த்தத்தை யனுசரித்து நான் அபிப்ராயப்படுகிற தென்னவென்றால் 36-வது பிரிவின்படி அந்த கற்றறிந்த ஜட்ஜியானவர் பிரஸ்தாப உத்திரவளிக்க அதிகாரமுள்ளவரல்ல என்பதே.

இதன் பேரில் 7-வது பிரிவின்கீழ் பிரஸ்தாப உத்திரவு அளிக்க கற்றறிந்த ஜட்ஜிக்கு அதிகாரமுண்டென்று அபீஷல் அஸைனி பக்ஷத்தில் மிஸ்டர் ஷேனய் வாதிக்கிறார். 7-வது பிரிவு இங்கிலீஷ் ஆக்ட்டின் 102-வது பிரிவிலிருந்து அதே வார்த்தைகளுடன் எடுக்கப்பட்டிருக்கிறது. 7-வது பிரிவு விஷயத்தில் 3 கேள்விகள் உண்டாகிறதாக எனக்குத் தோன்றுகிறது. முதலாவது 7-வது, பிரிவு சொத்தை பரிபாலனம் செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு பொருந்துமா? இரண்டாவது அப்படி பொருந்துமானல் ஒருபொதுக்கேள்வி உண்டாகிறது; அதாவது இன்ஸால்வன்ஸி நடவடிக்கையில் கடன் தீர்க்கச்சக்தியற்ற கடன்காரனுக்குள்ள பாத்தியங்களைக் காட்டிலும் அதிகமான பாத்தியங்களை அபீஷல் அஸைனி கேட்கும்போது அது விஷயமாய் அபீஷல் அஸைனிக்கும் 3-வது மனுஷியாளுக்கும் நேரிடும் விவகாரத்தை விமர்சை செய்ய அதிகாரமிருக்கிறதா யென்பது; 3-வது 7-வது பிரிவு பொருந்துமானல் பிரஸ்தாப உத்திரவு செய்த காலத்திலுண்டாயிருந்த சந்தர்ப்பங்களை யோசிக்கையில் அந்தப்படி உத்திரவு செய்ய அதிகாரமுண்டா? இப்போது 1வது கேள்வியைப் பற்றி கவனிப்போம். 7-வது பிரிவு பரிபாலன சம்மந்தமான நடவடிக்கைகளுக்கு அடுக்குமா? இங்கிலீஷ் ஆக்ட்டின் நிபந்தனைகள் இந்தியா ஆக்ட்டின் 108, 109 வது பிரிவுகளில் அடங்கியிருக்கிறது. இந்தியா ஆக்டு 109-வது பிரிவின் (1), (2) உள் பிரிவுகளும் இங்கிலீஷ்

ஆக்டின் 125-வது பிரிவு 5-6 உட்பிரிவுகளும் ஒன்றே. ஹாவிட்டுக்கும், ஹான்னுவும் வால்டர் ஹாவிட்டுக்கும் ஒரு தலையாக நடந்த வியாஜ்ஜியத்தில் கடன் தீர்க்க சக்தியில்லாமல் இறந்துபோகிற ஒரு கடன்காரனுடைய ஆஸ்தியை பரிபாலனம் பண்ணும் விஷயத்தில் நம் ஆக்ட்டு 30-வது பிரிவின்படியே உள்ள 1883-ஷூத்திய இங்கிலீஷ் ஆக்ட்டின் 27-வது பிரிவின் நிபந்தனைகள் பொருந்துமா என்று ஒரு கேள்வி பிறந்து அவை பொருந்தமாட்டாதென்று தீர்க்கப்பட்டது. அந்த கேசில் 27-வது பிரிவு இங்கிலீஷ் ஆக்ட்டின் III-வது பாகத்தின் நிபந்தனைகளில் ஒன்றல்ல ஆகையால் அந்த குறித்த பிரிவு சொத்து பரிபாலண விஷயத்தில் ஒவ்வாதென்று கொள்ளப்பட்டது. மிஸ்டர் ஜஸ்டிஸ் கேவ் அது விஷயமாய் சொல்லுவதாவது:—இந்த கேள்விக்கு தீர்மானம் 125-வது பிரிவின் அர்த்தத்தைப் பார்த்து சொல்லவேண்டியிருக்கிறது. அந்த பிரிவின் 6-வது உள்பிரிவு—(இந்த உள்பிரிவு நம் ஆக்டின் 109-வது பிரிவின் 2-வது உள்பிரிவு போன்றது). ஷை ஆக்டின் III-வது பிரிவு பின்னிட்டு உண்டாயிருக்கும் மாறுதல்களுடன் கடனிருக்க சக்தியில்லாமல் இறந்து போனவனுடைய சொத்துக்களை பரிபாலன விஷயத்திற்கு பொருந்தும் ஆகையால் III-வது பங்கின் நிபந்தனைகள் ஷை விஷயத்திற்கு ஆனதென்று ஸ்பஷ்டமான சட்டம் உண்டாயிருக்கிறது. (நம்முடைய ஆக்ட்டு 109-வது பிரிவின் 1-வது உள்பிரிவு) க்கு அனுசரணையான 5-வது உள்பிரிவு 6-வது உள்பிரிவின் நிபந்தனைகளை இது விஷயத்திற்கு அன்வயம் பண்ணப்படாதென்று எனக்குத் தோன்றுகிறது. 125-வது பிரிவு 1-வது உள்பிரிவின்படி கடனிருக்க சக்தியில்லாமல் இறந்து போகிறவர்களுடைய ஆஸ்தியை பரிபாலனம் செய்யும் விஷயத்தில் அனுசரிக்க வேண்டிய பிரிவுகள் இன்னின்னதென்று சட்ட நிரூபணை சங்கத்தாரே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஷை ஆக்ட்டு III-வது பாகத்தின் குறித்த பிரிவுகள் தான் பிரஸ்தாப விவகாரத்திற்கு உரிமையானதென்று சொல்லப்பட்டால் அதின் இதர பாகங்கள் அந்த விவகாரத்திற்கு பொருந்தாதென்றே அர்த்தம் செய்யவேண்டியது கிரமமாயிருக்கிறது. மேலும் அந்த ஜட்ஜி சொல்லுவதாவது—ஷை பிரிவின் வாக்கியத்தை பார்க்கையில் 125-வது பிரிவின்கீழ் பரிபாலனத்திற்காக எடுத்துக்கொண்ட சொத்துக்கள் விஷயத்தில் III-வது பாகத்தின் நிபந்தனைகள் தவிர இதர நிபந்தனைகளை பிரயோகிக்க நியாயம் சொல்லவில்லை. பிரஸ்தாப கேள்விக்கு ஷை தீர்ப்பை ஒட்டிப்பார்த்தால் அது செல்லாதென்கிற ஒரே தீர்மானம்தான் ஏற்படுகிறது. இந்த கேள்வியை விமர்சிக்க இன்னொரு ஆதாரமும் உண்டு அதாவது கோல்ட் கேசு. 1883-ம்வருஷத்திய கடன்காரர்களைப் பற்றிய ஆக்டின் 47-வதுபிரிவு கடன்காரன்தானே செய்திருந்த ஏற்பாடுகளை நிவிர்த்திக்கிறபடியால் கடன்காரர்களின் விவகாரத்துக்கான கோர்ட்டாரால் அந்த சொத்துகளை பரிபாலனம் செய்யும் விஷயத்தில் ஷை பிரிவு செல்லாதென்று தீர்மானிக்கப்பட்டது. இங்கிலீஷ் தீர்ப்புகளின்படி பரிபாலன விஷயமான நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக கொள்ளக் கோறப்படும் நிபந்தனைகள் III-வது பிரிவில் இல்லாதது ஆகையால் அந்த சட்டம் இந்தமாதிரி கேசுக்குச் சம்பந்தப்படாதென்பதற்கு போதுமானதாயிருக்கிறது. ஆனால் அந்த சட்டம் III-வது பாகத்தில் சேர்ந்ததென்றால் அது முடிவான வாதமல்ல. ஜஸ்டிஸ் Fry என்பவருடைய தீர்ப்பு இதுவிஷயத்தில் ஸ்பஷ்டமாயிருக்கிறது. அதுவிஷயமாய் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைப்பற்றி ஆதியோடந்தமாய்ச் சொல்லுகிறது. 1-வது உள்பிரிவில் கடன்காரர்களுக்கான சட்டத்தின்படி சொத்தை பரிபாலனம் செய்தல் என்னும் பதங்களை உபயோகித்திரு

ப்பதினால் இறந்துபோன கடன்காரனுடைய சொத்தில் 3-வது மனுஷியாளுடைய சொத்தும் சேர்ந்ததென்று தெரிவிக்கிறது அந்த பதங்கள் பரிபாலனம் செய்யவேண்டிய முறைமையைப் பற்றினதே யொழிய பரிபாலிக்க வேண்டிய பொருளைப் பற்றினதல்ல. 3-வது மனுஷியாளுடைய சொத்தையும் கடன் தீர்க்க சக்தியற்று இறந்துபோன கடன்காரனுடைய ஆஸ்தியில் சேர்த்து பரிபாலிப்பதற்கான அதிகாரத்தை கோர்ட்டாருக் குண்டாக்க வேணுமென்பது சட்ட நிரூபணை சபையாரின் அபிப்பிராயமாயிருந்தால் அந்தப்படி ஸ்பஷ்டமாயும் சந்தேகத்துக் கிடமில்லாத பாஷையிலும் சொல்லி யிருப்பார்கள். அந்தமாதிரி அதிகாரம் எப்போதும் சான்செரி கோர்டுக்கு இருந்ததே கிடையாது சொத்து பரிபாலனம் செய்யும் உத்திரவென்பது என்ன? இறந்துபோனவனுடைய சொத்தை பரிபாலனம் செய்வதென்பதே யொழிய வேறில்லை. அப்பேர்ப்பட்ட பரிபாலனத்துக்கு சம்மந்தமான வரையில் III-வது பாகத்திலிருந்து 125-வது பிரிவில் எடுத்துக்கொள்ளப்பட்டதே யொழிய வேறில்லை. 3-வது மனுஷியாளுடையதென்றுதென்படுகிற சொத்தும் தீர்க்கச் சக்தியற்று இறந்துபோன கடன்காரனுடைய ஆஸ்தியில் சேர்த்து நடவடிக்கை நடந்ததாக இந்தமாதிரி கேசுகள் கிடையாது; அல்லது இருப்பதாக எங்களுக்கு எடுத்து காட்டப்படவுமில்லை. இந்த பிரஸ்தாப கேசுக்காக முடிவான அபிப்பிராயம் ஒன்றும் இது விஷயத்தில் கொடுக்கவேண்டிய அவசியமும் தோன்றவில்லை. *In re Hewitt* கேசில் நடந்த தீர்ப்பு இந்த கேள்விக்கு செல்லாதென்று சொல்ல யாதொரு நியாயங்களும் எனக்குத் தோற்றவில்லை.

இந்த தீர்ப்பின் பொருட்டாக பரிபாலன சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு 7-வது பிரிவுபொருந்து மென்று வைத்துக்கொண்டால் ஒரு பொது கேள்வி பிறக்கிறது. அதாவது அந்த மாதிரி கேசுகளைக்கொண்டு வருவதாக கொடுபடும் நோட்டிஸின் பேரிலே அவைகளை விமர்சிக்கலாமா என்பதுதான். இந்த அம்சம் 7-வது பிரிவின் வியாக்கியானத்தைப் பொருத்ததாயிருக்கிறது. 7-வது பிரிவோ இங்கிலீஷ் ஆக்ட்டின் 102-வது பிரிவுலுள்ள வார்த்தைகளடங்கியதாயிருக்கிறது. அந்த பதங்கள் அதிக விரிவான பாவமுடையமையென்பதில் சந்தேகமில்லை. அவையாவன :— இந்த ஆக்ட்டின் நிபந்தனைக்குட்பட்டு முன்பின் பாத்தியாபாத்திய சம்பந்தமான எவ்வித அம்சங்களிலும் தீர்ப்பு கொடுக்க கோர்ட்டாருக்கு பூர்ணமான அதிகாரமுண்டு. இதுவேயல்ல; வேறே எவ்வித கேள்வியானாலும் அதாவது அவைகள் சட்டத்தைப் பொருத்ததானாலும் அல்லது விஷயத்தைப் பொருந்தினதானாலும் சரி—அம்மாதிரி கேள்விகள் இந்த கோர்ட்டின் அமுலுக்குள்பட்டு கடனிருக்கச் சக்தியற்ற கடன்கார விஷயமான எந்த கேசுகளில் ஏற்பட்டாலும் அல்லது பூரணமான நியாயம் செய்யும்படிக்காவது அல்லது சொத்தைப் பகிர்ந்து கொடுக்கும் விஷயத்திலாவது அவசியமென்று கோர்ட்டாருக்குத் தோன்றினாலும் சரி அப்பேர்ப்பட்ட கேள்விகளை விமரசை செய்ய கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. அதாவது கோர்ட்டாருடைய அமுலுக்குள்பட்ட கடனிருக்கச் சக்தியற்றவரிடம் எல்லா வியாஜ்ஜியத்திலும் மேற் சொல்லியபடி நடவடிக்கை நடத்தலாம் என்பது அர்த்தம்

இங்கிலீஷ் ஆக்ட்டின் 102-வது பிரிவின் பேரில் அனேக தீர்மானங்கள் ஆயிருக்கின்றன. அவைகளைபபற்றி நான் இவ்விடத்தில் வாதிக்கப்போகிறதில்லை. ஆனால் தீர்மானங்களின் சாதக பாதகங்களைப்பற்றி ஜஸ்டிஸ் வான வில்லியம்சு என்பர் தாம் கடன் தீர்க்கமுடியாதவர்கள் விஷயமாய் எழுதிய புஸ்தகத்தில்

பின் வருமாறு சொல்லியிருக்கிறார். அனேக விஷயங்களைக் குறிப்பிட்டுவிட்டு அவர் சொல்லுவதாவது:—பழைய ஆக்ட்டின்படி கடனிருக்கக்கூடாத கடன்காரர் வியாஜ்ஜியங்களுக்காகஏற்பட்ட கோர்ட்டார் அமுல்செலுத்தக்கூடாதிருந்த அம்சங்களில் ஒன்றான சொத்து பரிபாலன கர்த்தாவுக்கும் இதராளுக்கும் நேரிடும் கேசுகளில் ஹைகோர்ட்டாருக்கு இப்போது அமுல் செலுத்த அதிகாரமுண்டென்பது சட்ட நிரூபணை சபையாரின் அபிப்பிராயமென்று ஷை கவனிப்புகளினால் ஏற்படுகிறது. மேல்கண்டபடி சுருக்கிச்சொல்லிய சட்டத்தின்படி ஆபிஷல் அஸைனிக்கும் 3-வது கக்ஷிக்காரர்களுக்கும் உண்டாயிருக்கும் விவாதத்தை விமர்சிக்க வேறே வியாஜ்ஜியம் தொடரவேண்டியதில்லை யென்றும் அப்படி தொடருவதாக கொடுத்த நோட்டீஸின் பேரிலேயே தீர்ப்பு செய்யலாமென்றும் முடிவான தீர்ப்பு நான் சொல்லாவிட்டாலும் அந்தப்படி அபிப்பிராயம் கொள்ளலாமென்றே நினைத்தேன். ஆனால் 36-வது பிரிவின்கீழ் மேற்கண்டபடி அந்த கற்றறிந்த ஜட்ஜியானவர் தீர்ப்பு கொடுக்க எண்ணங்கொண்ட வகையில் அவருக்கு அந்த மாதிரி உத்திரவு கொடுக்க அதிகாரமுண்டா என்கிற கேள்வி ஏற்படுகிறது. இந்த கேள்வியினால் 3-வது அம்சம் விமர்சிக்கப்படும். கற்றறிந்த ஜட்ஜி சொல்லுவதாவது:—“36-வது பிரிவின்படி ஆபீஷல் அஸைனி சொத்தை தனக்கு ஒப்பிவிக்கும்படி விசாரணையில்லாமலே உத்திரவு செய்யக் கேட்கலாம்” என்பதே—கடனிருக்கச் சக்தியற்ற கடன்காரர்கள் கேசுகளில் உண்டாகிற எவ்வித சங்கதிகளையும் விமர்சிக்கத்தமக்கதிகாரம் 7-வது பிரிவின்படி உண்டென்று சொல்லுகிறார். பாத்தியா பாத்திய விஷயத்தை தீர்மானம் செய்து சொத்தை ஒப்புவிக்கும்படி அந்த ஜட்ஜி உத்திரவுசெய்தது 36-வது பிரிவின்படி தனக்குண்டாயிருக்கும் அதிகாரத்தை அனுசரித்து செய்ததாக தெரியவருகிறது. இந்த கடன் கேசில் ஆபீஷல் அஸைனிக்கும் 3-வது திறத்தாருக்கும் பாத்தியா பாத்தியத்தைப் பற்றி நேரிடும்விவாதத்தை விமர்சிக்க 36-வது பிரிவின்படி கோர்ட்டாருக் கதிகாரமில்லை என்பது என்னுடைய அபிப்பிராயமென்று முன்னமே சொல்லியிருக்கிறேன். அது ஏனென்றால் இந்த கேசில் பார்ப்பதற்கு 3-வது திறத்தாருக்கே சொத்து பாத்தியமிருப்பதாயும் அந்தப்படி இல்லை யென்கிற அம்சம் ருசுவாகவேண்டியதாயும் இருக்கிறது. அந்தப்படியேதான் பாவப்பட்டு இந்த கேசு வாதிக்கவும் பட்டிருக்கிறது.

இத்தீர்ப்பு நியாயங்களினால் இந்த உத்திரவு செய்ய அதிகாரமில்லாமலிருக்க செய்யப்பட்டதாக நாம் தீர்க்கவேண்டியிருக்கிறது. மேல்கண்ட வியாஜ்ஜியம் தொடரப்படுமென்று கொடுத்த நோட்டீஸுடன் சேர்த்திருக்கும் டாப்பில் 1—2 குறிப்பிட்ட சொத்துக்களுக்குச்சம்பந்தப்பட்ட வரையில் ஷை உத்திரவை மாற்றி இங்கேயும் மேஸ்தர் ஜஸ்டிஸ் பேக்வெல் கோர்ட்டிலேயும் நேர்ந்த செலவுகளை அசல் வியாஜ்ஜிய செலவுடன் சேர்ப்பிக்க வேணுமென்றும் மேஸ்தர் கிருண்டின் கக்ஷிக்காரருடையவும் ஆபீஷல் அஸைனியினுடையவும் செலவுகளை கடனிருக்க ஏற்படும் ஆஸ்தியிலிருந்து கொடுக்கவேணுமென்றும் தீர்ப்பு செய்கிறேன்.

ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்டு:—நான் இந்த தீர்மானத்தை ஒப்புக்கொள்ளுகிறேன்.

உத்திரவு தள்ளுபடி செய்யப்பட்டது.

PUNJAB CHIEF COURT.

பஞ்ஜாப் சீப்பு கோர்ட்டு.

Case No. 251 of 1910—21-1-14.

ஆக்பரும் மற்றவர்களும்—அப்பீல் வாதிகள்.

v

தாபுவும் மற்றவரும் ... பிரதிவாதிகள்.

ஸாதாரணமாய், ஒரு பாகஸ்தருடைய ஸ்வாதீனம் எல்லாபாகஸ்தர்களுடைய ஸ்வாதீனமாகும். ஆனால் ஒரு தப்பான செய்கையினால் ஒரு பாகஸ்தர் தான் பிரத்யேக ஸ்வாதீனத்தை அடைந்தால், மற்ற பாகஸ்தர்கள் தங்கள் பாத்தியங்களை பயன்பெற செலுத்தி அந்த பிரத்யேக ஸ்வாதீனத்தை கெடுக்கவேண்டும். தங்களுடைய எண்ணத்தை ஸாதாரண

மாய் வெளிப்படுத்துவதும் அல்லது பாகம் செய்ய மனு கொடுப்பதும் போதுமானதல்ல.

ரிவினியூ அதிகாரிகள் தங்கள் கணக்கில் எல்லா பாகஸ்தர்களின் பெயர்களை வைத்து வைப்பதினால் மட்டும், சொத்தை அக்கிரமமாய் கைப்பற்றிக் கொண்டவருக்கு விரோதமாய் தாவாவுக்குள்ள காலநிர்ணயத்தை பாதுகாற்க மாட்டாது.

Case No. 217 of 1910—9-5-13

பகவன்தாஸ் .... அப்பீல்வாதி.

v.

சிவதயால் .... அப்பீல் பிரதிவாதி.

உபய கக்ஷிகளில் எவருடைய மனுவின் பேரிலாவது ஒருதாவாவை நிறுத்திவைக்க கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. ஆனால், அம்மாதிரிக்கான மனு விவாதம்சங்கள் ஏற்படுவதற்கு முன் கொடுக்கப்படவேண்டும்.

F. A. No. 897 of 1907—6-12-10

கரம்சந்த் .... அப்பீல்வாதி.

v.

பஸந்த கௌரும் மற்றவர்களும் } பிரதிவாதிகள்.

தஸ்தாவேஜிக்கு துகை கொடுக்கப்படாவிட்டாலும் குறிக்கப்பட்ட பிரதிபலன் வரபெற்றால் ஒரு அடமானம் செலாவணியாகத் தக்கது. பிரதிபலனில் ஒரு பாகம், அடமானம் அபூர்ணமாயும் செலாவணி செய்யத் தகாததாயு மாகுமென்றும் விதி, பிரதிபலன் பின்னிட செலுத்தலை சம்பந்தப்படாமல் இறந்தகாலத்திய செலுத்தலை சம்பந்தப்படாமல் மட்டும் பிரயோகிக்கும்.

ALLAHABAD HIGH COURT.

அலஹபாத் ஹைகோர்ட்.

தீர்மானங்கள்.

Case No. 74 of 1914—16-3-14.

பாபு பிஷம்பர்தாஸ் ... அப்பீல்வாதி.

v.

பாபு கோவிந்தாஸ் .... அப்பீல் பிரதிவாதி.

வாதியும் பிரதிவாதியும் காசியில் ஓர் ஹிந்து ஜாதியைச் சார்ந்தவர்கள். இங்கிலாந்துக்கு போய் வந்தவர்களுடன் அஜ்ஜாதியார் சிலர் கூடி புசித்தார்களென்பதாக கலவரம் ஏற்பட்டு, பூர்வீக ஆசாரங்களினின்று விலகுகிறதில்லை யென்றும் ஸமுத்திரை யாத்திரை செய்து வந்தவர்களுடன் சகவாசம் செய்கிறதுமில்லை, புசிக்கிறதுமில்லை யென்பதாகவும் ஒப்புக்கொள்ளும் பொருட்டு பிரதி இன்னும் சிலருடன் சேர்ந்து விளம்பரம் செய்தனர். அவ்விளம்பரத்தில் கையெழுத்துச் செய்ய வாதி மறுதளித்தார். பின்பு, இங்கிலாந்துக்கு போய் வந்தவர்களுடன் இவ்விடமிருக்கும் அதே ஜாதியாருக்கு அனேக வருஷங்களாக சகவாச மேற்பட்டிருப்பதாகவும், இன்னும் அனேக இம்மாதிரியான ஸந்தர்பங்களுக்கும் விசாரணை துடரவேணுமென்பதாக வாதியும் அவருடைய ப்ராதாவும் ஓர் கடித்தை பிரசுரம் செய்தனர். இக்காரணத்தால் ஓர் ஜாதிகூட்டமேற்பட்டு வாதியால் பிரசுரமான கடிதத்தில் கையெழுத்திட்டு பிரதிவாதியின் விளம்பரத்தில் கையெழுத்திட மறுதளித்தவர்கள், ஜாதி கூட்டத்திற்கு முன்வந்து ஸந்தேகம் தீரும் வரையில், தாக்காலிகமாய் ஜாதிகட்டுபோடப்பட்டனர். வாதி பிரதிவாதியின் பேரில் 11,000-ரூபாய்க்கு மான நஷ்ட தாவாசெய்தார்.

இந்த தாவாவில்.

(1) ஜாதி கூட்டத்தாருடைய தீர்மானம் தன்னை அணுகாதென்று ஸ்தாபித்தாலொழிய, கூட்டத்தாருடைய யோக்கியதை அதிகாரமிவர்களுக்கு தீர்மானம் உட்பட்டிருப்பதாயும்,

(2) ரிஜிஸ்டர் செய்யப்பட்ட வாதியின் குடும்பவிலாசத்திற்கு நோட்டீசு அனுப்பியது போதுமானதென்றும் அக்குடும்பத்தில் சம்பந்தப்பட்ட ப்ரத்யேக நபருக்கு நோட்டீசு அனுப்பவது அனவசியமென்றும்,

(3) தாத்காலிகமாய் ஜாதியிலிருந்து விலக்கியது நியாயமென்றும்,

(4) ஹிந்துலா, மதம் இவைகளை அனுசரித்து ஸமுத்திர யாத்திரை நியாயம் நியாயமல்லவென்றும் விஷயத்தை நியாய ஸ்தலங்கள் பரிசீலிக்கத்தக்கவையல்ல வென்றும் தீர்மானிக்கப்பட்டது.